
சர்வதேச புலனாய்வு வார இதழ்

10-12-2017

# பரபரப்பு

ஆசிரியர்: ரிஷி

## கொழும்பில் இருந்து தப்பிச் சென்ற 'றோ' உளவாளி ரொமேஷ் சண்முகம்!








## புலிகள் VS ராணுவம் ஆயுதங்கள் இலவசமாக கிடைத்த ரகசியம்!

## பாகிஸ்தானில் சி.ஐ.ஏ.பின் ரகசியத் தளம்!



ஒருமுறை படித்துப் பாருங்கள்... வாராவாரம் நீங்களே தேடி வாங்குவீர்கள்!

# இலங்கை மாணவர்கள் நெதர்லாந்தில் குடியேற உதவும் நுஃபிக் அமைப்பு!

இலங்கையில் இருந்து மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லும் மாணவர்கள் இதுவரை பெரியளவில் கவனம் செலுத்தியிராத நாடுகள் பற்றியும், அந்த நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் பற்றியும் எழுதிவரும் தொடரில், நெதர்லாந்து பற்றி இதழ் 12ல் எழுதியிருந்தோம் (இதழ் 13ல் இடமின்மை காரணமாகத் தொடர் இடம்பெறவில்லை). இதோ அதன் தொடர்ச்சி.

அந்தக் கட்டுரையில் நெதர்லாந்தைச் சேர்ந்த வெளிநாட்டு மாணவர் நலன்புரி மற்றும் ஆராய்ச்சி அமைப்பான நுஃபிக் (Nuffic) வெளியிட்டிருந்த புள்ளிவிபரம் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெளிநாட்டு மாணவர்களின் வருகையும், மேற்படிப்பு முடிந்தபின் அவர்கள் நெதர் லாந்திலேயே நிரந்தரமாகக் குடியேறுவதற்கு வசதி செய்து கொடுப்பதும், நெதர் லாந்தின் பிராந்திய மற்றும் தேசிய நலனுக்கு முக்கியமானது" என்று குறிப்பி டப்பட்டுள்ளது.

முக்கியமாக, நெதர்லாந்தின் பிராந்திய சிறு நகரங்களில் சனத்தொகை குறைந்து கொண்டே போவதைச் சுட்டிக் காட்டியுள்ள அந்த அமைப்பு, அந்தச் சிறு நகரங் களில் மேற்படிப்புப் படித்த வெளிநாட்டு மாணவர்கள், மேற்படிப்பு முடிந்தபின் அதே நகரத்தில் குடியேற விரும்பினால், அந்த முயற்சி ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளது.

இந்த வெளிநாட்டு மாணவர் நலன்புரி மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, நெதர்லாந்தின் குடிவரவு இலாகாவுடன் இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறது. அந்த வேலைத் திட்டங்களில் ஒன்று, நெதர்லாந்தில் பல்கலைக்கழக இறுதி யாண்டில் கல்விகற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு, மேற்படிப்பு முடிந்தபின் நெதர்லாந்தில் என்ன வசதி வாய்ப்புக்கள் உள்ளன என்பது குறித்து விளக்கி, அவர்களை நெதர்லாந்தில் குடியேற ஊக்குவிப்பது.

இலங்கையில் இருந்து மேற்படிப்புக்காக இங்கிலாந்து, அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள், மேற்படிப்பு முடிந்தபின் லண்டனிலோ, நியூயோர்க்கிலோ அல்லது வேறு நகரங்களிலோ எப்படி தொடர்ந்தும் தங்கியி ருக்கலாம் என்று பல்வேறு வழிமுறைகளில் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். சிலர் முயற்சியில் வெற்றி பெறுகிறார்கள். சிலர் விசா முடிந்த பின்னரும் தங்கியிருந்து முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

இப்படியான நிலையில், நெதர்லாந்து என்ற ஐரோப்பிய நாடு ஒன்று, வெளிநாட்டு மாணவர்கள் மேற்படிப்பு முடிந்தபின் தமது நாட்டில் குடியேற ஊக்குவிப்பதை எம்மில் பலர் அறிந்திருப்பதில்லை.

நுஃபிக் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்றொரு விஷயம், நெதர்லாந்துக்கு மேற்படிப்புக்காக வரும் வெளிநாட்டு மாணவர்களில் மேற்படிப்பு முடிந்தபின் நெதர்லாந்தில் குடியேறுவோரில் பெரிய சதவீதத்தினர் நெதர்லாந்தின் பெரிய வர்த்தக நகரமான ஆம்ஸ்டர்டாமில் குடியேறவே விரும்புவதாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் தலைநகரமும், ஆம்ஸ்டர்டாம்தான். வேலை வாய்ப்புகள் மிகப் பிர காசமாகவுள்ள நகரமும் அதுதான். ஆனால், நெதர்லாந்தின் மற்றைய நகரங் களிலும் பிரகாசமான வேலை வாய்ப்புகள் உள்ளதாகக் குறிப்பிடும் நுஃபிக் அமைப்பு, இப்படியான நகரங்களில் குடியேற விரும்பும் வெளிநாட்டு மாணவர் களை ஊக்குவிப்பதுடன், அந்த நகரங்களில் உள்ள வேலை வாய்ப்புகள் பற்றிய விபரங்களையும் தெரியப்படுத்துகிறது. அத்துடன், வேலை வாய்ப்புகளைப் பெறுவ தற்கும் உதவிகளைத் தமது அமைப்புச் செய்வதாகக் குறிப்பிடுகிறது.

இதுபோன்ற சேவைகள் நெதர்லாந்தில் இருப்பது தெரியாமல், அங்கு வரும் வெளி நாட்டு மாணவர்கள் தலைநகரில் உள்ள பல்கலைக்கழகங்களிலும், மாஸ்ட்ரிச்ட் நகரில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் படிக்கவே விரும்புவதாகத் தெரிவித்துள் ளது நுஃபிக் அமைப்பு. இவர்களிடமுள்ள புள்ளிவிபரத்தின்படி, இந்த இரு நகரங்களுக்கும் மேற்படிப்புக்காக வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 10,000 பேர்.

ஆனால், அந்த இரு பெருநகரங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் தமது மொத்த மாணவர் தொகையில் அதிகபட்சமாக சுமார் 10 சதவீத வெளிநாட்டு மாணவர்களையே வருடாந்தம் உள்வாங்கிக் கொள்கிறார்கள். இதனால், அந்த இரு நகரங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் மேற்படிப்புக்கு விண்ணப்பிக்கும் பல மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை.




ஆனால், டெல்ஃப்ட், ஹேக், வாகெனிங்கன் ஆகிய நகரங்களில் உள்ள பல் கலைக்கழகங்கள் தமது மொத்த மாணவர் தொகையில் அதிகபட்சம் 20 சதவீத வெளிநாட்டு மாணவர்களை உள்வாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பதை, வெளி நாடுகளில் உள்ள மாணவர்கள் அறிந்திருப்பதில்லை. நடப்புக் கல்வியாண்டில் இந்த நகரங்களில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த வெளிநாட்டு மாணவர்கள் யாரும் நிராகரிக்கப்படாமல், அனைவருக்கும் அனுமதி வழங் கப்பட்டதாகக் குறிப்பிடுகிறது, நுஃபிக் அமைப்பு.

அந்தத் தொடரின் அடுத்த அத்தியாயத்தில் நெதர்லாந்தின் வெவ்வேறு நகரங்களில் உள்ள சில பல்கலைக்கழகங்கள் பற்றிப் பார்க்கலாம்.

பரபரப்பு வார இதழில் வெளியாகும் ஆக்கங்கள் எதையும் மறு பிரசுரம் செய்வதோ, ஒலிபரப்பு, ஒளிபரப்பு செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. கட்டுரைகளில் எழுதியவர் பெயர் இடம்பெறவிட்டால், அந்தக் கட்டுரைகளை எழுதியவர் பரபரப்பு வார இதழின் பிரதம ஆசிரியரே. பரபரப்பு வார இதழில் வெளியாகும் விளம்பரங்களின் பொருளடக்கத்துக்கு விளம்பரதாரர்களே முழுப் பொறுப்பாளர்கள்.

**தொடர்புகளுக்கு**


இலங்கை தலைமை அலுவலக முகவரி: 46 மாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய், இலங்கை.
தொலைபேசி: 021 225 5678 அல்லது 021 225 6830
மின்னஞ்சல்: info@paraparapumedia.com

**Sri Lankan Head Office**
**Address:** 46 Mavadi Lane, Suthumalai South, Manipay
**Phone:** 021 225 5678 / 021 225 6830
Email: info@paraparapumedia.com

**Our Management Team**
**General Manager Marketing**
Mr. S.Mathusan (mathusan@paraparapumedia.com)
Phone: 076 461 1774

**Marketing Executives**
Ms. S.Sharmini (sharmi@paraparapumedia.com)
Ms. Sinthuja Srikantharasa (sinthu@paraparapumedia.com)
Mr. P.Sathees Kumar (sathees@paraparapumedia.com)

**பிரதம ஆசிரியர்**
ரிஷி
**Editor-in-Chief**
Rishie
Phone: 077 965 5636
Email: rishie@paraparapumedia.com



# ஆபிரிக்க சஃபாரி எந்த நாட்டு உடை தெரியுமா?

ஆபிரிக்க சஃபாரி என்றால் என்னவென்று தெரியுமா? ஆபிரிக்கர்கள் போடும் சஃபாரி உடை என்று நினைத்தீர்கள் என்றால், இந்தக் கட்டுரையை நீங்கள் அவசியம் படிப்பது நல்லது. ஆபிரிக்க சஃபாரி என்றால், ஆபிரிக்காவில் உள்ள காடுகளுக்குச் செல்லும் சாகசப் பயணம். இலங்கையில், பெரும்பாலானவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் அமைவது இல்லை. காரணம் என்னவென்றால், வெளிநாடு போவதென்றால், இலங்கையில் பெரும்பாலானவர்கள் விரும்புவது, வெளிநாடுகளில் உள்ள பெரிய நகரங்களுக்கான பயணத்தைத்தான்.

காடுகளில் உள்ள ஏராளமான விலங்குகளைக் கண்டு ரசிப்பதற்கும், சாகச வேட்டைக்கும் என உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளும், வேட்டைக்காரர்களும் ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளுக்கு அதிகளவில் சென்று திரும்புகின்றனர். ஆபிரிக்கக் காடுகளில் சிங்கம், யானை, கழுதைப்புலி, வரிக்குதிரை, ஒட்டகம், முதலை என அத்தனை வகை விலங்குகளும் சுதந்திரமாக, கூட்டங் கூட்டமாகத் திரிந்து கொண்டிருப்பதே பலரையும் அங்கே இழுத்துச் செல்லும் காரணம்.

### மிருகம் நம்மீது பாய்ந்துவிடுமோ என்ற திக்... திக்...

ஆபிரிக்க சஃபாரிக்கு வருவோர், அளவில் சிறிய வாகனங்களில் மட்டுமே வருகின்றனர். அதிக சத்தமின்றிப் பேசிக்கொள்வதோடு, (சத்தம் போட்டால் மிருகம் தங்கள்மீது பாய்ந்துவிடலாமென்ற திக்... திக்...) எதிரே தென்படும் விலங்குகளைத் தங்கள் கமரா மூலம் படம் பிடித்துக்கொள்கின்றனர். அந்த மகிழ்ச்சியுடனேயே காட்டிலிருந்து புறப்பட்டுப் போய் விடுகின்றனர்.

புலியோடு நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம் என்ற சந்தோஷம் மட்டுமல்ல ஆபிரிக்க சஃபாரி. அந்தப் புகைப்படத்தைவிட வாழ்க்கையில்

ஒரு புதிய அனுபவமாகவும், அதிக செலவு கொண்டதாகவும் ஆபிரிக்க சஃபாரி இருக்கும். ஆனாலும், பயனுள்ளது. நீங்கள் அங்குபோக வேண்டும் என நினைத்தால், நிலைமை மாறுவதற்குள் விரைந்து சென்று விடுங்கள்.

ஏனென்றால், ஆபிரிக்காவில் நாட்டு நிலைமைகளும், காட்டு நிலைமைகளும் அடிக்கடி மாறிவருகின்றன.

ஆபிரிக்க சஃபாரி என்றதும் வெளிநாடுகளில் உள்ள அநேகருக்கு நினைவில் வரும் நாட்டின் பெயர் கென்யா. காரணம் கென்யா நாட்டு உல்லாசப் பயணத் துறையின் அருமையான விளம்பரங்கள். ஆனால் கென்யாவைவிட வேறு சில நாடுகள் சஃபாரிக்கு அற்புதமானவை என்பது எனது கணிப்பு. உதாரணமாக டான்சானியா நாட்டில் நிறைய காட்டுப்பகுதிகள், சரணாலயங்கள், பூங்காக்கள் உள்ளன.


### சிங்கம் சிங்கிளாக வரவில்லை!

டான்சானியா நாட்டில் என்கோரோங் கோரோ என்ற இடம் மனதைக் கவரக் கூடியது. நாங்கள் சென்றபோது மனிதர்கள் வரும் அறிகுறியை உணர்ந்தவுடன், படுத்திருந்த இரு சிங்கங்கள் உஷாராகிவிட்டன. அடர்ந்தும், உயர்ந்தும் வளர்ந்த புல்வெளிகளிடையே, மேலும் 11 சிங்கங்கள் எங்களை நோக்கி நடைபோட்டு வருவதைப் பார்த்தோம்.

சிங்கம் வருமென்று தெரியும். தெரிந்துதான் காட்டுக்குள் சென்றோம். இருந்தாலும் நிஜமான சிங்கத்தைக்



அடுத்த பக்கம் வாருங்கள்




கூப்பிடுத் தொலைவில் 'லைவ்'வாகப் பார்த்தபோது அதுவரை சொல்லிக் கொண்டிருந்த வீரமெல்லாம், சொல்லாமலே ஓடி விடுகிறது. வாயிலிருந்து காத்துத்தான் வருகிறது. "ஆ..ஆ.. சி.. சி.. சிங்கம்!" (அசிங்கம் அல்ல).

"என்ன இருந்தாலும் இந்த ஆள் ரிஷி கில்லாடிதான், காட்டுக்குள் இவரை நோக்கி 11 சிங்கங்கள் வந்தும் எதுவும் ஆகாமல் இங்கே வந்து கட்டுரை எழுதுகிறாரே" என்று எனது வீர தீரப் பிரதாபம் பற்றி நீங்கள் நினைக்கத் தொடங்குமுன் ஒரு வார்த்தை. 11 சிங்கங்கள் எங்களை நோக்கி வந்தபோது நாங்கள் இருந்தது ஒரு காருக்குள்... கண்ணாடிகளையெல்லாம் ஏற்றிவிட்டு!

சில விநாடிகளில், பின்னால் பார்த்தால் மேலும் 7 சிங்கங்கள் வந்தன. அதைத் தொடர்ந்து 3 சிங்கங்கள். காரில் சென்றிருந்த நாங்கள் சிங்கக் கூட்டத்தால் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டோம். காரிலிருந்த சுற்றுலாப் பயணிகள் அனைவரும் மூச்சைப் பிடித்துக்கொண்டு மௌனமாக இருந்தோம். எல்லோரது பார்வையிலும் ஒருவித எதிர்பார்ப்பு. "இந்தச் சிங்கங்கள் விளையாடுமா? சண்டையிடுமா?" காமெராக்கள் மாத்திரம் தொடர்ந்து படங்களை எடுத்த வண்ணம் இருந்தன.

தண்ணீர் தேங்கிய ஓரிடத்தில் பெரிய ஆண் சிங்கம் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. பின்னர் எல்லாச் சிங்கங்களும் ஓய்வெடுக்கத் தொடங்கின. காரில் வந்த எங்களை அவை கவனிக்கவில்லைப் போலும்.

## சிங்கம் நக்கலாகச் சிரிக்கிறதோ!

எங்களைக் கவனிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்? தமது அன்றைய உணவுக்காக 100 பயணிகள் சேரும் வரை அவை காத்திருக்கின்றனவா? இல்லை, 1000 பேர் தேவைப்படுமோ? அதுவுமில்லாவிட்டால் சிங்கத்துக்கு எங்களது உடலின் சதைப் பிடிப்பு சிரிப்புக்கிடமாக இருக்கிறதோ?

உலகிலேயே, சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் இடங்களில் ஆபிரிக்காவும் ஒன்று. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 8 சதவீதம் அதிகரித்துள்ளதாக, உலகச் சுற்றுலா அமைப்பு தெரிவித்துள்ளது. நாங்கள் போனதைத்தான் எழுதிவிட்டோம். வேறு யாரெல்லாம் இங்கே சிங்கம் பார்க்க வருகிறார்களாம்?

அபுதாபி அரச குடும்பத்தினருக்கு தான்சானியாவில் விலங்குகள் வேட்டை மைதானம் உள்ளதாம். டெட்டர்னர் தனது சொந்த ஜெட் விமானத்தில்தான் தான்சானியா வருகிறாராம். தான்சானியாவின் மேற்குப் பகுதியிலுள்ள தனியார் வனத்தில் பில் கேட்ஸ் ஓய்வு எடுக்கிறாராம். ஜெஸ்ஸிகாசிம் சன், கென்யா நாட்டின் காட்டில் உள்ள ஆடம்பர முகாமில் தங்கிச் செல்கிறாராம். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனும் வந்து போயிருக்கிறாராம். அடேங்கப்பா!

இந்த உலகப் புகழ் பிரபலங்களுக்கு போஸ் கொடுத்த சிங்கங்கள்தான் எனக்கும் போஸ் கொடுத்தன என்று நினைத்தபோது சிலிர்ந்தது (சிங்கத்துக்கல்ல, எனக்கு)

கிழக்கு ஆபிரிக்கா காடுகள் பாதுகாப்பானவை என்பதால், கென்யாவின் மசாய் மரா பூங்காவில் உள்ள 4000 ஹோட்டல்கள் மற்றும் கூடார முகாம் அறைகள் சஃபாரி சீசனில் முழுவதும் பதிவு செய்யப்பட்டுவிடும். பிரதான சஃபாரி சீசன், ஜூன் முதல் ஒக்டோபர் வரை. அது வெய்யில் கால சீசன். இரண்டாவது (மழை கால) சீசன் டிசெம்பரில் தொடங்கி மார்ச் நடுப்பகுதிவரை.

கென்யாவுக்கு மட்டும் சுற்றுலாப் பயணிகளாக ஆண்டுக்கு 1.6 மில்லியன் பேர் வருகின்றனர். அருகில் உள்ள தான்சானியாவும் சுற்றுலாத் துறையில் முன்னேறத் துடிக்கிறது. ஆனால், வெளிநாடுகளில் போதியளவு விளம்பரம் செய்வதில்லை தான்சானிய அரசு. கிளிமஞ்சரோ மலைச்சிகரம், தங்குனிகா ஏரி, என்கோரோங்கோரோ எனப் பல சுற்றுலா இடங்கள் தான்சானியாவில் உள்ளன.

சுற்றுலா மேம்பாடு மூலம், நாட்டு மக்களை வறுமையின் பிடியிலிருந்து விடுவித்து விடலாம் என தான்சானிய அரசாங்கம் கருதுகிறது. அடுத்த ஆண்டுக்குள் 4500 புதிய ஹோட்டல்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு விடுமாம்.



அடுத்த பக்கம் வாருங்கள் ➡



## எதிர்ப்பா? காசு வருகிறதே!

தான்சானியாவின் சோரங்கெட்டி காட்டுப்பகுதியில் ஹோட்டல்கள் கட்டும் திட்டத்தை, வன ஆர்வலர்கள் எதிர்க்கின்றனர். இயற்கையான வனப்பகுதி கெட்டுவிடுமாம். ஆனால், சுற்றுலா மூலம் அரசாங்கத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் 1 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

நீங்கள் கண்களை மூடிக்கொண்டு ஆபிரிக்காவைப் பற்றிச் சிந்தித்தால், விரிந்து, பரந்த காலி இடங்கள், நெடிது உயர்ந்த மரங்கள், சிங்கங்கள், புழுதி படிந்த சாலைகள்தான் நினைவுக்கு வரும். சும்மா சொல்லக்கூடாது, தான்சானியாவும் அதே தோற்றத்தில்தான் இருக்கிறது.

"சாகச வேட்டைப் பயணத்துக்குப் போவதென்றால் இங்குதான் வருவேன்" என்கிறார் கிளிமஞ்சாரோ மலையேற்ற அமைப்பின் இணை உரிமையாளர் ஈ பென் ஸ்கோமேன்.

தான்சானியாவில் தாரங்கிர் என்ற இடத்தில் தேசியக் காட்டுப் பகுதி உள்ளது. இங்கு ஆயிரக்கணக்கான யானைகள் உள்ளதால் செல்வாக்கு அதிகம். காரில் செல்லும்போது சிறுத்தைப்புலி குறுக்கே நடந்து செல்லும். கோடையிலும் காடு பசுமையாக இருக்கிறது. நாங்கள் ஒரு நாள் விடிந்ததும் புறப்பட்டுச் சென்று 2 மணி நேரம் காட்டுக்குள் சுற்றியும் ஒரு யானையைக்கூடப் பார்க்க முடியவில்லை. சாலையோ குண்டும் குழியுமாக இருந்தது, தாகம் வேறு.

## யானைக்கு ஸ்வெட்டர் தேவையோ?

பூமத்திய ரேகைக்குத் தெற்கே உள்ள இப்பகுதியில் அப்போது குளிர்காலம் ஆரம்பமாம் (அப்படித் தெரியவில்லையே). யானைக்குக் குளிர் பிடிக்காதாம். கூட வந்த கைட் கில்லியார்ட் மொள்ளெல் சொன்னார். வேலிகள் போடப்படாத இந்தக் காட்டின் பரப்பளவு 1000 சதுர மைல்கள் என்பதால், யானைகள் எங்கு வேண்டுமானாலும் போயிருக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.

எனினும் ஒரு வழியாக 20 யானைகளை ஓரிடத்தில் நாங்கள் பார்த்தோம். அந்தக் காட்டுப்பகுதியில் பார்த்தபோது யானைகளை மிகப்பெரியதாகவோ, கொடூரமானதாகவோ தெரியவில்லை. ஏதோ, வீட்டு வளர்ப்புப் பிராணிகளைப் போலத்தான் தோன்றின. தாயும் குட்டிகளுமாக துதிக்கைகளைச் சேற்று நீரில் மூழ்கியடித்து விளையாடிக்கொண்டிருந்தன.

அட.. சிங்கத்தைப்போல, யானைகளும் எங்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

காட்டை விட்டு வெளியே வந்தபோது, பூங்காவுக்குள் செல்வதற்காக 23 கார்கள் காத்திருந்தன. உள்ளே யானைகளைப் பார்க்கலாம் என்று அவர்களுக்கு அபார நம்பிக்கை போலும்!

அமெரிக்க 'மிக்கி மௌஸ்' என்றால் கதையே வேறு...!

இங்கு பொறுமையும், நிதானமும் தேவை. காடுகளுக்குள் விலங்குகளைக் காணச் செல்வது அமெரிக்காவின் புளோரிடாவில் டிஸ்னி லான்டைப் சுற்றிப்பார்ப்பது போலல்ல. இங்கு பொறுமை மிக அவசியம். எங்களுக்குத் தரிசனம் தருவதற்கு மிருகங்கள் காத்திருப்பதில்லை நாம்தான் மிருகங்களுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும். உங்கள் பயணத்தின்போது யானைகளைப் பார்க்க முடியுமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் அமெரிக்க டிஸ்னி லான்டில் 'மிக்கி மௌஸ்' எங்களிடம் காசு பறிக்கக் காத்திருக்கும்!

"இங்கு வரும் பெரும்பாலான அமெரிக்கர்கள் உடனே மிருகங்களைப் பார்க்கத் துடிக்கிறார்கள். அவர்களுக்குப் பொறுமை கிடையாது" என்றார் கைட்.

"அமெரிக்கர்களின் சுபாவமே அப்படித்தான்" என்று சொல்ல வாய்திறந்தேன். ஆனால் சொல்லவில்லை. காரணம் எனக்கு அருகே யானை சைஸில் ஒரு அமெரிக்கர் நின்றிருந்தார்.

மிருகங்கள், "வரும்... ஆனா வராது" என்று விளையாட்டுக் காட்டினாலும், தான்சானியாவில் உள்ள வனவிலங்குக் காடுகள் சுவாரசியமானவைதான். காட்டுக்குள் புகுந்துவிட்டால் செல்போன் சேவை, சுற்றுலாப் பயணிகளுக்கு உதவிகரமாக உள்ளது. காட்டுக்குள் செல்லும்போது நாம் எங்கே இருக்கிறோம் என்று செல்போனின் செயற்கைக்கோள் வரைபடத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

என்னதான், நவீன தொழில்நுட்ப முன்பதிவு சிஸ்டம் இருந்தாலும், இலங்கையிலிருந்து தான்சானியா செல்வதற்கு 2 விமானங்கள் மாறி, கொழும்பிலிருந்து புறப்பட்டு 24 மணி நேரத்தின் பின்னர்தான் தான்சானியாவைச் சென்றடையலாம். லண்டன் அல்லது பாரிஸ் உட்பட பல ஐரோப்பிய நகரங்களில் இருந்து 9 மணி நேரத்தில் போய்விடலாம். காரணம், ஐரோப்பிய நகரங்களில் இருந்து இயக்கப் படும் நேரடி விமான சேவைகள்.

## செலவு கொஞ்சம் அதிகமாகுமுங்க!


கென்யாவைப் போலவே தான்சானியாவிலும், சாலைகள் படுமோசமானவை. காட்டு முகாம்களில் சுடுதண்ணீரும் மின்சாரமும் அளவோடுதான் கிடைக்கும்.

"அட.... காட்டுக்குத்தானே போகிறோம். அவ்வளவு செலவாகாது" என்று நினைத்து விடாதீர்கள். ஆப்பிரிக்கக் காடுகளில் பயணிப்பது மலிவானதல்ல. சஃபாரி சீசன் காலங்களில், குழுவாக ஆபிரிக்கப் பயணம் சென்றால் ஒரு நபருக்கு 5,000 டொலர் செலவாகும். இதைவிட விமானக் கட்டணம் தனி. தனிப்பட்டுச் செல்கின்றவர்களுக்கு, ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டுக்கு விமானம் அல்லது ஹெலிகாப்டரில் செல்வதற்காகும் செலவு உட்பட 8,000 டொலர் தேவை. இலங்கை நாணயத்தில் கிட்டத்தட்ட 1 மில்லியன் ரூபா.

காட்டுக்குள் செல்வதற்கான முதல்நாளில் ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருக்கும் கூடார முகாமில் ஒரு நாள் இரவு தங்கியிருக்க வேண்டும். கொசுத்தொல்லை உட்பட வேறு சில சிரமங்கள்

அடுத்த பக்கம் வாருங்கள் ➡






ஏராளமான வரிக்குதிரைகள், மாரா நதியை நீந்திக் கடந்து கொண்டிருந்தன. அவற்றின் இடப்பெயர்ச்சி நேரம் அது. தான்சானியாவில் உள்ள சோரென்கெட்டியிலிருந்து அவை கென்யாவை நோக்கிச் செல்கின்றன என்று கைட் சொன்னார்.

எமது கார்கள் நின்றிருந்த இடத்துக்குப் பின்னால் ஒரு புதரிலிருந்து சிங்கம் வெளிப்பட்டது. ஆற்றங்கரையோரம் இருந்த வரிக்குதிரைகள் பயத்தால் எங்கே தப்பியோடுவது எனத் தவித்தன. ஆற்றுக்குள் பாய்ந்த சில வரிக்குதிரைகள் தப்பிக்கப் பார்த்தன. நாஷனல் ஜியோகிரபி சானலில் கண்ட காட்சியை நேரில் காணும்போது த்ரில்லிங்காகத்தான் இருந்தது.

“ஹோட்டல்கள் நிரம்பி வழிந்தாலும், விமானங்கள் கூட்ட நெரிசலில் இருந்தாலும், சஃபாரி சீசன் காலங்களில் இங்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகின்றனர். காட்டுச் சுற்றுலா உண்மையிலேயே தான்சானியா, கென்யா ஆகிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவிகரமாக உள்ளது” என்கிறார் அமெரிக்காவின் மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழக உயிரியல் பேராசிரியர் டாக்டர் கேய் ஹோல்கேம்ப். இப்பெண்மணி 1988ம் ஆண்டிலிருந்தே மசாய்மாராவில் கழுதைப்புலிகள் பற்றி ஆய்வு நடத்தி வருகிறார். அட, 30 ஆண்டுகளாக 'புலி ஆய்வு'

இருப்பினும், ருசியான உணவுகளும், விருந்துகளும், உடம்பைப் பிடித்து விடும் மசாஜ் வைத்தியமும் அங்கு கிடைக்கும் (மசாஜின்போது எலும்புகள் ஜாக்கிரதை)

“சுற்றுச் சூழல் நலன் காக்கும் சிறிய முகாம்களுக்கே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்” என்று மசாய்மாராவில் உள்ள நைபோர் முகாம் மேலாளர் ஜோன்னா ஜான்சன் கூறினார். மசாய்மாராவுக்கு காரில் போய்க்கொண்டிருந்தபோது, ஓட்டுநர் பிரான்சிஸ் கிதிஞ்சி சிங்கோரி காரை திடீரென நிறுத்தி “அதோ, அங்கே பாருங்கள்!” எனக் கூச்சலிட்டார். பின்னால் வந்த வாகனங்களும் திடீரென 'பிரேக்' போட்டு நின்றன. முன்னே என்ன நடக்கிறது?



இலங்கை அரசும், கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக 'புலி ஆய்வு' செய்த கதை அவருக்குத் தெரியுமா?

இரவு வேளையில் கூடாரங்களில் நான் தங்கியிருந்தபோது சிங்கத்தின் கர்ஜனையை நாலைந்து முறை மிக அருகில் கேட்டேன்.

சிங்கத்துக்கு நான் யாரென்ற விஷயம் தெரிந்திருக்கவேண்டியது கட்டாயமில்லை. என்மேல் பாய்ந்தால் அடுத்த வாரம் பரபரப்பு வாசகர்கள் ஏமாற்றமடைவார்கள் என்ற விஷயத்தையும் சிங்கத்துக்கு யாரும் சொல்லியிருக்க வாய்ப்பில்லை. எனவே, என்மீது ஒருவேளை பாய்ந்தாலும் பாய்ந்து விடலாம்.

அது தவிர, மற்றொரு முக்கிய விஷயமும் உண்டு. அது என்னவென்றால், எனது உடல்வாகு சிங்கத்துக்கு ஒரு நேரத்துக்கு சூப் தயாரிக்கக் கூடிய அளவில்கூட இல்லை என்பதால் மறுநாளே காட்டிலிருந்து புறப்பட்டுவிட்டேன்.

எதற்கு சிங்கத்தை ஆசை காட்டி மோசம் செய்யவேண்டும்? ப

---



### வெளிநாட்டு வாழ்க்கை

# ரஷ்யாவை இரும்பு விலைக்கு வாங்கும் சீனா!

ரஷ்யாவில் முன்னெப்போதும் இல்லாத ஒரு வித்தியாசமான கோஷம் சமீபத்தில் கேட்கத் தொடங்கியிருக்கின்றது. ரஷ்யப் பத்திரிகைகளின் தலைப்புக்களிலும் அது இடம்பெறத் தொடங்கியிருக்கிறது. ரஷ்ய நாடாளுமன்றத்திலும் இது பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

கோஷம் என்ன? “சீனா வருகிறது ரஷ்யாவுக்கு உள்ளே!”

பொதுப்படையாகப் பார்க்கும்போது இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கதையாகவோ, அபத்தமான கோஷமாகவோ தென்படலாம். ஆனால், ரஷ்யர்கள் சொல்வதிலும் விஷயம் இருக்கின்றது. ரஷ்யாவை உலக வரைபடத்தில் பார்க்கும்போது அதன் ஒரு பகுதி ஐரோப்பிய ரஷ்யா என்றும், மற்றுமோர் பகுதி தூரகிழக்கு ரஷ்யா என்றும் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதில், தூரகிழக்கு ரஷ்யா என்று சொல்லப்படும் பகுதிதான் “சீனா வருகிறது” கோஷம் எழுப்பப்படும் பகுதி. சைபீரியாவிலும் ரஷ்யாவின் கிழக்கு மாகாணங்களிலும் சிறிது சிறிதாகச் சீனர்களின் ஜனத்தொகை அதிகரித்துச் செல்வதை ரஷ்யர்கள் கவலையுடன் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ரஷ்யாவின் கிழக்கு நகரங்கள் சிலவற்றைப் பாருங்கள். வியாடிவோஸ்டொக், கட்ரோவ்ஸ்க் ஆகிய நகரங்களில் வெளிப்படையாகப்

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

பார்க்கும்போது சீன மக்கள் ரஷ்யர்களைவிட அதிகமாக நடமாடுவது போல தெரியாது. ஆனால் அந்த நகரங்களின் வர்த்தகத்தைக் கட்டுப் படுத்துபவர்கள் சீனர்கள். நகரிலுள்ள முக்கிய வியாபார ஸ்தாபனங் கள் சீனர்களுக்குச் சொந்தமானவை.

குடிவரவு குடியகல்வு விவகாரங்களில் பலத்த கட்டுப்பாடுகளை ஒரு காலத்தில் (கம்மியூனிசத் திரைக்குள் இருந்தபோது) வைத்திருந்த ரஷ்யாவில் இது ஒரு ஆச்சரியமான விஷயம்தான்.

1991ம் ஆண்டு அப்போதைய சோவியத் யூனியன் உடையத் தொடங் குவதற்கு முன்பு இந்தப் பகுதிகள் இருந்த நிலைமையே வேறு. அப்போதெல்லாம் ஐரோப்பிய ரஷ்யாவுக்கும் வேறு சில கிழக்கு ஐரோப்பிய கம்மியூனிஸ்ட் நாடுகளுக்கும் மீன், நண்டு உட்பட கடலு ணவு வகைகள் ஏற்றுமதியாவது இந்தப் பகுதியில் இருந்துதான். அது மாத்திரமல்ல, இந்தப் பகுதியில் பெரிய தொழிற்சாலைகள் இருந்தன. இரும்பு உற்பத்தி பெருமளவில் நடைபெற்றது. விமானங்கள், கப் பல்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டன. கிட்டத்தட்ட முழு ரஷ்யாவின் தேவைகளையும் சில பொருட்கள் விஷயத்தில் கிழக்கு ரஷ்யாதான் கவனித்துக் கொண்டது.

1990களில் சோவியத் யூனியன் துண்டு துண்டாக உடைந்து, வெவ்வேறு நாடுகள் உருவாகி, ரஷ்யா தனித்து விடப்பட்ட பின், இன்று நிலைமை தலைகீழ்.

உற்பத்தி நிலையங்கள் தொழிற்சாலைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. சோவியத் யூனியன் முழுவதற்கும் பொருட்களை ஏற்றுமதி செய்து கொண்டிருந்த இந்தப் பிரதேசத்தில் இப்போது சீனாவில் இருந்து பொருட்கள் இறக்குமதியாகின்றன.

அப்படி இறக்குமதியாகும் பொருட்கள் முன்னர் அங்கே தயாரான பொருட்களை விடத் தரமாகவும் இருக்கின்றன. விலை குறைவாகவும் இருக்கின்றன. இப்போ தெல்லாம் இங்கு பிடிக்கப்படும் மீன்களும் நண்டுகளும் ரஷ்யாவுக்கு உள்ளேயே வருவதில்லை. ஒக்ஹோட்ஸ்க் கடலில் இருந்து நேரடியாக கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் சென்று விடுகின்றன.



இழுத்து மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகளை சீனர்கள் 'இரும்பு விலை'க்கு வாங்கிக் கொள்கிறார்கள்.

முன்பு வல்லரசாக இருந்தபோது ரஷ்யாவின் எல்லைகளுக்கு உள்ளே நுழைவதே கடினமாக இருந்தது. இப்போதெல்லாம் ஆயிரக் கணக்கில் எல்லை தாண்டும் நடமாட்டம் இருக்கிறது. அப்படி ஆயிரக் கணக்கில் வருபவர்கள் சீனாவிலி ருந்துதான் வருகிறார்கள்.

ரஷ்யாவுக்கு உள்ளே சீனாவில் இருந்து வருபவர்கள் எல்லாம் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள் என்ற நிலை இதுவரை இல்லை என்பது உண்மைதான். இது வரை காலமும் உள்ளே வருபவர்கள் சிறிது காலம் தங்கியிருந்து பணம் சம்பா தித்துக்கொண்டு மீண்டும் சீனாவுக்கு திரும்புவதுதான் அதிகமாக நடக்கின்றது.

ஆனால், நாளையே நிலைமை மாறலாம்.



உள்ளே நுழைபவர்கள் ரஷ்யாவுக்கு உள்ளே நிரந்தரமாக தங்கிவிட முடிவு செய்தாலும் செய்யலாம் என்பதுதான் ரஷ்யர்களின் பயமெல்லாம்.

என்ன காரணம்? ரஷ்யாவின் கிழக்குப் பகுதி மிகப் பெரிய பரப்பளவுடைய பிரதேசம். 6,215,900 சதுர கிலோமீட்டர்கள். இவ்வளவு பெரிய பரப்பளவில் வசிக்கும் மக்களின் ஜனத்தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 7 மில்லியன்.

இந்த எண்ணிக்கை 1991ம் ஆண்டு சோவியத் யூனியன் உடைவதற்கு முன்னர் 9 மில்லியனாக இருந்தது. 15 வருடத்தில் 2 மில்லியன் என்ற எண்ணிக்கையில் ஜனத்தொகை குறைந்திருக்கின்றது. தொழிற்சாலைகள் மூடப்படுவதும், பொரு ளாதாரம் சரிவதும்தான் இதற்கு காரணம்.

இங்கே இப்படியிருக்க, எல்லையின் மறுபுறத்தில் சீனாவில் நிலை என்ன?

ரஷ்ய எல்லையுடன் இருக்கும் சீனாவின் மூன்று வடகிழக்கு மாகாணங்களைப் பாருங்கள். ஹெயிலோங் ஜியங், ஜி லின், லியோ னிங் ஆகிய மூன்று மாகாணங்களிலும் உள்ள ஜனத்தொகை எவ்வளவு தெரியுமா? 100 மில்லியன் மக்கள்.

பொதுவாகவே சீனாவின் தனிநபர் வருமானம் மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவு. அதிலும் இந்த மூன்று சீன மாகாணங் களிலும் அதைவிடக் குறைவு.

அதிக ஜனத்தொகை, குறைந்த தனிநபர் வருமானம் என்ற நிலையில் எல்லைக்கு இந்தப்பக்கம் இருக்க, எல்லைக்கு மறுபக்கத்தில் ஜனத் தொகை குறைந்து கொண்டு போனால் என்ன நடக்கும்?

சீனர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ரஷ்யாவுக்கு உள்ளே குடியேறத் தொடங்கி விடுவார்கள். அதுவும் ரஷ்யாவின் கிழக்குப் பகுதிகளின் வர்த்தகங்களில் பெரும்பகுதி சீனர்களின் கைகளில் இருக்கும் நிலையில் இந்த குடியேற்றச் சாத்தியம் எவ்வளவு வேகமாக நடை பெறலாம் என்பதை நினைத்துப் பாருங்கள். அதற்குத்தான் ரஷ்யா பயப்படுகிறது.

உத்தியோகபூர்வமாக, ரஷ்ய அரசின் கணிப்பீட்டின்படி தூரகிழக்கு ரஷ்யாவில் 40,000 சீனர்கள் வசிக்கிறார்கள். இந்த எண்ணிக்கை ரஷ்ய குடிவரவு இலாகா வைத்திருக்கும் எண்ணிக்கை.

ரஷ்ய அரசு அதிகாரிகளிடம் கேட்டால் அவர்களே இந்த எண்ணிக் கையை நம்பத் தயாராக இல்லை. என்ன காரணம்?

ரஷ்யாவில் ஆழமாக பரவியுள்ள லஞ்சம். சீனாவில் இருந்து எல்லையைத் தாண்டி ரஷ்யாவுக்கு உள்ளே வரும் ஒருவர் சில நூறு டொலர்களுடன் ரஷ்யக் குடியு ரிமையை பெற்றுவிட முடியும். குடிவரவு இலாகாவில் லஞ்சம் கொடுத்துவிட்டால் சீனப் பிரஜை, ரஷ்யப் பிரஜையாகிவிடுகின்றார்.

இவர்கள் எல்லாம் அரசாங்கம் வைத்திருக்கும் 40,000 என்ற கணக்கில் வராத ஆட்கள். எனவே லேனா ஆற்றிலிருந்து பேரிங் கடல்வரை பரந்திருக்கும் மிகப் பெரிய தூரகிழக்கு ரஷ்யாவுக்குள் உண்மையில் எத்தனை சீனர்கள் இருக் கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது.

ஆனால், அந்த எண்ணிக்கை ரஷ்ய அரசு வைத்திருக்கும் 40,000 என்ற எண்ணிக்கையை விட பல மடங்கு அதிகம் என்பது மாத்திரம் எல்லோருக்கும் தெரியும்.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# இலங்கை விவகாரத்தில் இந்திய உளவுத்துறை 'றோ' புகுந்து விளையாடிய கதை!

கடந்த இதழ் வரை 5 அத்தியாயங்கள் வெளியான 'இலங்கை மீது தாக்குதல் நடத்த இந்திய ராணுவத்தின் தாக்குதல் திட்டம்' தொடரின் தொடர்ச்சிதான் இது. இனி வரும் அத்தியாயங்களில் இந்திய ராணுவத் திட்டம் இடம்பெறுவதைவிட, இந்திய உளவுத்துறை 'றோ' இலங்கை விவகாரத்தில் என்னவெல்லாம் செய்தது என்பதே இடம்பெறவுள் ளது என்பதால், தொடரின் பெயரை மாற்றியுள்ளோம்.

## அத்தியாயம் ஆறு
## ரொமேஷ் சண்முகமும் இலங்கை ராணுவ அதிகாரியும்

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஒரு அதிகாரி என்ற பெயரில் இயங்கிய 'றோ'வின் உளவாளி மாத்யூ ஆப்ரஹாம் விவகாரம் ஒரு பக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்க, வேறு ஒரு பக்கமாக மற்றொரு விஷயமும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது புது டில்லியிலுள்ள 'றோ'வின் தலைமையகத்துக்கும் கொழும்பில் இருந்த ரகசியத் தொடர்பாளர் ஒருவருக்கும் இடையிலான மற்றொரு ரகசிய விவகாரம் என்று கடந்த அத்தியாயத்தை முடித்திருந்தோம்.

இப்போது அந்த விவகாரத்தைப் பார்க்கலாம்.

இந்த விவகாரம் என்னவென்றால், இலங்கை ராணுவத்தில் முக்கிய பதவியில் இருந்த உயரதிகாரி ஒருவர், இந்திய உளவுத்துறை 'றோ'வின் ரகசியச் சம்பளப் பட்டியலில் இருந்தார். 'றோ' அவருக்கு மாதாமாதம் ரகசியமாக ஊதியம் கொடுத்துக் கொண்டிருந்தது.

அத்துடன் இலங்கை ராணுவ ரகசியங்களையும் (அந்த நாட்களில் அப்படியொன்றும் பெரிதாக இருந்ததில்லை) இலங்கை அரசின் ராணுவ ரீதியிலான முடிவுகளையும் அவர் 'றோ'வுக்குத் தெரிவிக்கும்போது, அதற்காக விசேட போனஸூம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

1983ல் இலங்கையில் இனக்கலவரம் ஏற்படுவதற்கு முன்னரே இவர் 'றோ'வின் ஆளாக இருந்தார். இலங்கை ராணுவத்தின் இந்த உயரதிகாரி (பெயர் வேண்டாம் – சில சிக்கல்கள் இருக்கின்றன), கொழும்பு7ல் வசதியான வீடு ஒன்றில் வசித்து வந்தார். அத்துடன் இவருக்கு அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலும் ஒரு வீடு இருந்தது. இந்தியாவிலும் ஒரு வீடு சொந்தமாக இருந்தது.

இவரை எப்படி 'றோ' தனது இன்போர்மர் ஆக்கிக் கொண்டது? அதற்குக் காரணமாக இருந்தவரும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்த ஒரு அதிகாரி.

இந்தியத் தூதரகத்தில் முதன்மைச் செயலாளர் (அரசியல் பிரிவு) என்ற பதவியில் இருந்தவர் அவர்.

அந்தப் பதவி காரணமாக இலங்கை அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் வரை பலரை இவர் சந்திப்பார். அதை யாரும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதில்லை.

உண்மையில் அவரும் ஒரு 'றோ' ஏஜென்ட்தான். தூதரக அதிகாரி என்ற போர்வையில் கொழும்பில் இயங்கி வந்தார். அவரது பெயரைச் சொல்லி விடலாம். தற்போது சிக்கல் இல்லை. ரொமேஷ் சண்முகம் என்பது அவரது பெயர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வேலையில் இருந்தபோது இந்த சண்முகம்தான், இலங்கை ராணுவ உயரதிகாரியின் தொடர்பை 'றோ'வுக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர். ஒரு கட்டத்தில் ரொமேஷ் சண்முகத்தின் கொழும்பு நடவடிக்கைகளை இலங்கையின் உளவுத்துறை கண்காணிக்கத் தொடங்கியது.

இவர் ஒரு தடவை கொழும்பு கல்கிசையில் இருந்த ஹோட்டல் ஒன்றில் இலங்கை அரசின் உயரதிகாரிகள் இருவரைச் சந்தித்தபோது (அந்த இருவரும் இவருக்கு வழமையாகத் தகவல் கொடுப்பவர்கள்) ஒரு இக்கட்டில் சிக்கிக்கொள்ள இருந்தார்.

அது என்ன இக்கட்டு? கல்கிசை ஹோட்டலுக்கு அன்று வந்திருந்த இரு அதிகாரிகளில் ஒருவர் சண்முகத்திடம், "இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விருப்பமா?" என்று கேட்க, ரொமேஷ் சண்முகமும் சம்மதித்தார்.

அதிகாரியால் கூறப்பட்ட பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த உயரதிகாரி இலங்கை உளவுப் பிரிவின் ஆள் என்ற விஷயம், அவரை சண்முகத்துக்கு அறிமுகப்படுத்த நினைத்த இலங்கை உயரதிகாரிக்கே தெரிந்திருக்கவில்லை.

அன்றிரவு அதே ஹோட்டலில் புதிய அதிகாரியும், சண்முகமும் சந்தித்துக் கொண்டனர். அது ஒரு சாதாரண சந்திப்புத்தான். சண்முகம் பிடி கொடுத்துப் பேசவில்லை. பிறகு மற்றொரு முறை சந்தித்து மேலதிக விபரங்கள் பற்றிப் பேசலாம் என்பதுடன் சந்திப்பு முடிந்துவிட்டது.

ஆனால், அடுத்த சில தினங்களிலேயே ரொமேஷ் சண்முகம், தமக்கு இருந்த கொழும்புத் தொடர்புகள் மூலம், தம்மை வந்து சந்தித்த நபர் இலங்கை உளவுத்துறையின் ஆள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார். உடனே அவருக்கு ஒரு விஷயம் புரிந்து போனது. தாம் இலங்கை உளவுத்துறையின் சந்தேக வளையத்தில் இருக்கிறோம் என்பதே அந்த விஷயம்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



இந்த விஷயம் டில்லியிலுள்ள 'றோ'வின் தலைமையகத்துக்கு சண்முகத்தால் தெரிவிக்கப்பட்டது.

தமது உளவாளி மீது அவர் தங்கியிருந்து இயங்கும் நாட்டு உளவுத் துறைக்குச் சந்தேகம் ஏற்பட்ட விஷயம் 'றோ'வுக்குத் தெரிய வந்த பின்னரும், அவர்கள் ரொமேஷ் சண்முகத்தை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பணிபுரிய விடுவார்களா? அடுத்த சில தினங்களிலேயே ரொமேஷ் சண்முகத்துக்கு வேலை மாற்றல் உத்தரவு வந்துவிட்டது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து அவர் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட இடம், டில்லியிலுள்ள 'றோ'வின் தலைமையகம்! அங்கே அவர் பணிபுரிந்தது, இலங்கை விவகார இலாகாவில்!

இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டவுடன் இந்தியாவின் கவனம் இலங்கையின் பக்கமாக சீரியசாகத் திரும்பியது. 'றோ'வின் தலைமையகம் இலங்கை தொடர்பாக எவ்வளவு அதிக தகவல்களைப் பெற முடியுமோ அவ்வளவு அதிக தகவல்களைப் பெற விரும்பியது.

'றோ'வின் தலைமையக அறிவுறுத்தலின்படி, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர கத்தில் பணிபுரிந்த மற்றொரு அதிகாரி, தமது இன்போர்மராக இருந்த இலங்கை ராணுவ உயரதிகாரியைச் சந்தித்தார்.

அவரிடம் கூறப்பட்ட தகவல், "ரொமேஷ் சண்முகம் தற்போது கொழும்புவரை வரு வது பாதுகாப்பானது அல்ல. நீங்கள் (இலங்கை ராணுவ அதிகாரி) டில்லிக்கு வந்து ரொமேஷ் சண்முகத்தைச் சந்திக்க முடியுமா? விஷயம் முக்கியமானது."

இலங்கை ராணுவ அதிகாரிக்கு இந்தியாவில் வீடு இருந்த காரணத்தால் அவர் அடிக்கடி இந்தியா போய் வந்து கொண்டிருந்தார். எனவே இந்தியா போவதில் சிரமம் எதுவும் இருக்கவில்லை.

இலங்கை ராணுவ அதிகாரி, ரொமேஷ் சண்முகம் ஆகிய இருவருக்கும் இடையிலான சந்திப்பு டில்லியில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பிலும் அதையடுத்த சில தகவல் பரிமாற்றங்களிலும் இருந்து 'றோ'வின் இலங்கை விவகார இலாகாவுக்கு கீழ்வரும் தகவல்கள் கிடைத்தன.

1) இலங்கை அரசு தமது ராணுவப் பயிற்சிகளுக்காக கீனி மீனி சேர்விஸ் (Keeny Meeny Service) என்ற தனியார் நிறுவனத்தை நாடியிருக்கிறது. (இது பற்றி இந்தத் தொடரின் மற்றொரு அத்தியாயத்தில் விபரமாக எழுதுகிறேன்)

2) பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் புதிதாக இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ள ராணுவ ரீதியான தொடர்புகள்.

3) அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும் இலங்கை அரசு கேட்ட ராணுவ உதவிகள் பற்றிய விபரங்கள்.

4) அமெரிக்கா, தமது வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா (VOA) வானொலி நிலையத்தின் ட்ரான்ஸ்மிட்டிங் ஸ்டேஷனை இலங்கையில் அமைப்பது தொடர்பாக இலங்கை அரசுடன் நடத்தத் தொடங்கியிருந்த பேச்சு வார்த்தைகள்.

5) "இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தை வெளிநாட்டு ராணுவம் ஒன்றின் உபயோகத்துக்கு கொடுத்தால், அது ராணுவ அளவில் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா?" என்பது பற்றி ஆராய்ந்து அவசர அறிக்கை ஒன்றைத் தருமாறு இலங்கை அரசு, இலங்கை ராணுவத் தலைமையை கேட்டுள்ள விஷயம்.

6) திருகோணமலையிலுள்ள எண்ணை சேகரிப்பு மையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நீண்ட கால லீஸ் அடிப்படையில் கொடுக்கும் திட்டத்தில் இலங்கை அரசு எந்த நிறுவனத்துக்கு சாதகமாக நடந்து கொள்ளப் போகிறது என்ற விபரம்.

மொத்தத்தில், ரொமேஷ் சண்முகம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்த நாட்களில், இலங்கை ராணுவ உயரதிகாரி ஒருவருடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு காரணமாக 'றோ'வின் கைகளுக்கு இவ்வளவு முக்கிய தகவல்களும் சிங்கிள் ஷொட்டில் சுலபமாகப் போய் சேர்ந்தன.

இந்தத் தகவல்களும் இந்தியாவின் நட்சத்திர உளவாளி ஆர்.என். காவ்வின் காதுகளுக்குப் போய்ச்சேர, டில்லி, இலங்கை அரசுக்கு எதிராக கடுமையான நிலையை எடுக்க இதுவும் ஒரு காரணமாகியது.

சரி. ரொமேஷ் சண்முகத்துக்கும், அவருக்குத் தகவல் கொடுத்த இலங்கை ராணுவ உயரதிகாரிக்கும் அதன்பின் என்ன நடந்தது?

இலங்கை ராணுவ உயரதிகாரி பின்னாட்களில் செய்த ஒரு முட்டாள்த்தனமான காரியத்தால் இலங்கை ராணுவ உளவுத் துறையினரிடம் (MI) வசமாக மாட்டிக் கொண்டார்.

அவர்மீது ராணுவ விசாரணை நடைபெற்று, இலங்கை ராணுவத்தில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன்பின் அமெரிக்கா சென்றவர், ஏதோ காரணங்களுக்காக அங்கேயும் சில சிக்கல்களுக்கு உள்ளானார் என்கிறார்கள். தற்போது ஐரோப்பிய நாடு ஒன்றில் வசிக்கிறார்.

கொழும்பு இந்தியத் தூதரகத்திலிருந்து டில்லிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ரொமேஷ் சண்முகம் அதன்பின் என்ன செய்தார்?



இந்தியத் தூதரகம் கொழும்பு

இந்தியா ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்த ஆபரேஷன் பிரதமர் இந்திராவின் மறைவுக்குப் பிறகு, 'த தேர்ட் ஏஜன்சி'யிடமிருந்து 'றோ'வின் கைகளுக்கு வந்து சேர்ந்தது. அப்போது ரொமேஷ் சண்முகம் 'றோ'வின் விசேட பிரிவு ஒன்றில் உயரதிகாரியாக இருந்தார்.

அந்த விசேட பிரிவுதான் ஈழ விடுதலை இயக்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதப் பயிற்சிகளைப் பின்னர் கவனித்துக் கொண்டது.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கான பயிற்சியின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில இயக்க உறுப்பினர்களுக்கு இந்தியக் கடற்படையின் மூத்த பயிற்சியாளர் ஒருவர் விசேட பயிற்சி ஒன்றைக் கொடுத்தார்.

அந்தப் பயிற்சி என்னவென்றால், ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் இலங்கையின் கடற்பகுதியில் செயற்படும்போது, இந்தியக் கடற்படை சார்பாக செய்ய வேண்டிய கடற்பகுதி உளவு வேலைகள்.

இது என்ன புதிதாக உள்ளதே என்று யோசிக்கிறீர்களா? இதற்கு ஒரு முக்கியமான காரணம் இந்தியாவுக்கு இருந்தது. அந்தக் காரணம் என்ன? இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்து இந்தியக் கடற்படை வெளிநாட்டுக் கப்பல் நகர்வுகளை கண்காணிக்கும். ஆனால் ஒரு அளவு தூரத்துக்கு மேல் அவர்களால் கண்காணிக்க முடியாதபடி இலங்கையின் கடல் எல்லை குறுக்கிடுகிறது.

அப்படியான சந்தர்ப்பத்தில் இலங்கையின் கடல் எல்லைக்குள் இருந்து இயங்கிய ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்கள், இந்தியா கொடுத்த விசேட கடற்பகுதி உளவு பார்த்தல் பயிற்சிமூலம் வெளிநாட்டுக் கப்பல்களின் நகர்வுகளைக் கண்காணிக்க வேண்டும்.

நடமாட்டம் ஏதாவது தெரிந்தால் இந்தியக் கடற்படைக்குச் சங்கேத மொழி (கோர்ட் வேர்ட்) மூலம் அதை தெரியப்படுத்தவேண்டும்.

இந்தியாவில் பயிற்சி கொடுக்கப்பட்ட ஆயிரக் கணக்கான ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்களில், மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிகச் சிலருக்கே கொடுக்கப்பட்ட இந்த விசேட பயிற்சிக்குப் பொறுப்பாக இருந்தவர், நாம் முன்னர் குறிப்பிட்ட அதே ரொமேஷ் சண்முகம்தான்.

இது நடந்த நாட்களில் அமெரிக்கா இலங்கையில் அமைக்க விரும்பிய வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா (VOA) வானொலி நிலையத்தின் ட்ரான்ஸ்மிட்டிங் ஸ்டேஷனை இந்தியாவுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகப் பார்த்தது. காரணம், அது உண்மையில் ஒரு வானொலி நிலையமே இல்லை. வானொலி நிலையம் என்ற போர்வையில் இயங்கிய உளவுத் தகவல் ட்ரான்ஸ்மிஷன் சென்டர். வெவ்வேறு நாடுகளில் அமெரிக்க உளவுத்துறை NSAயின் மேற்பார்வையில் இயங்கியது.

ஈழ விடுதலை இயக்கத்தினருக்கு இந்தியா ஆயுதப் பயிற்சிகளைக் கொடுத்துக் கொண்டிருக்க, நடப்பவை ராணுவ ரீதியாக சாயத் தொடங்கியதையடுத்து வேறு இரு வெளிநாட்டு உளவுத்துறைகளும், இலங்கை விவகாரத்தில் தமது உளவாளிகளை இறக்கி விட்டன.

அந்த வெளிநாட்டு உளவுத்துறைகள், இலங்கையையும், 'றோ'வையும் உளவு பார்த்த விபரங்களை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்... (தொடரும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

## ரிஷியின் டயரி



# ஆஹா! எந்தக் கட்சி என்று கேட்டால் உடனே அரிவாளா?

மதுரை ரெயில்வே ஸ்டேஷன். கடந்த அத்தியாயத்தில் "இங்கேயே நில்லுங்கள். நான் டிக்கட் எடுத்து வருகிறேன்" என்று கூறி நிறுத்திவிட்டுச் சென்ற நண்பரையும், மற்றப மூன்று மாணவிகளையும் நோக்கி நான் சென்றபோது, அவர்கள் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ஆச்சரியத்துக்குக் காரணம், டிக்கட் எடுத்து வருகிறேன் என்று போன நான், இன்னொரு நபருடன் வருகிறேன் என்பதுதான்!

"டிக்கட் எடுத்தாச்சா" என்று கேட்டார் ஒரு வனிதை.

"எடுக்கவில்லை. 24 மணிநேரத்துக்கு முன்னே முன்பதிவு செய்தால்தான் டிக்கட் புக் பண்ணி தருவார்களாம். ஆனால் இவர் வேறு ஒரு ஐடியா சொல்கிறார்."

"இவரா? யார் இவர்" சுகந்தியின் குரலில் சந்தேகம்.

"இவர் 'துண்டு முன்பதிவிலே' பெரிய கில்லாடி. தலைக்கு பத்துரூபா. சீட்டிலே துண்டு ஸ்பெஷலிஸ்ட்"

"தலை, துண்டு, சீட்? என்ன, பேச்சு ஒரு மாதிரியாக இருக்கே. டிக்கட் வாங்கப் போன இடத்திலே ஏதாவது பானம் கீனம் சாப்பிட்டு விட்டீரா" என்றார் நண்பர்.

"சேச்சே. கடந்த அத்தியாயம் படித்திருந்தால், 'துண்டு முன்பதிவு' புரிந்திருக்கும். இதுதான் இங்கே நடைமுறை. வேணும்ன்னா சார்கிட்டே கேட்டுப் பாருங்க. சார், உங்களுக்கு என்ன பேர் சொன்னீங்க..."

"இன்னும் சொல்லலீங்க. நமக்குப் பேரு செம்பகமூர்த்திங்க."

"செம்பக மூர்த்தி சார். இவுங்களுக்கு துண்டு முன்பதிவு பத்திச் சொல்லுங்க. அவுங்களுக்கு சரியென்றால் எனக்கும் ஓகே"

"வெயிட் எ மினிட். இவர் ரெயில்வே அதிகாரியா," என்று கேட்டார் சுகந்தி. அவருக்கு நாங்கள் ஏதோ சட்டவிரோதமாகச் செய்ய ட்ரை பண்ணுகிறோம் என்று சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம்.

"இவர் ரெயில்வே அதிகாரி என்று ஒரு வகையிலே சொல்லமுடியாது. மற்றொரு வகையிலே சொல்லலாம். இவர் நம்ம ரெயில்வே போட்டரின் ஏஜன்ட்"

"போட்டருக்கே ஏஜன்ட்டா?"

"ஆமாங்க. போட்டர்தானே துண்டு போடணும்" என்றார் செம்பகமூர்த்தி.

"ஐயோ. யாராவது புரியும்படியாகச் சொல்லுங்கள் பிளீஸ்"

விஷயத்தை விளக்கமாகப் புரியவைத்தார் செ.மூர்த்தி. ஆளுக்கு 10 ரூபா கொடுத்து விட்டால் ட்ரெயின் பிளாட்போர்முக்கு வருமுன்னரே சீட்டில் துண்டு போட்டு முன்பதிவு பண்ணிவிடுவார் போட்டர் முனுசாமி. நாங்கள் நிதானமாக ஏறி அந்த சீட்டில் அமரலாம். அவ்வளவுதான் விஷயம். வெரி சிம்பிள் புக்கிங்.

நாங்கள் எல்லோருமே இலங்கையில் இருந்து தமிழகத்துக்குப் புதிதாகச் சென்றவர்கள் என்பதால் இதெல்லாம் உண்மையிலேயே சாத்தியம் தானா என்பதில் சந்தேகம் இருந்தது.

"ஏங்க, முனுசாமி துண்டு போட்டு வெச்சிருக்கும் சீட்டிலே வேறு யாரும் உக்கார மாட்டாங்களா?"

"நெனைச்சுக்கூடப் பாக்க மாட்டாங்க. முனுசாமி போட்ட துண்டு என்றால் மருதை ஸ்டேஷனே நடுங்குமுங்க."

"அப்ப துண்டுபோட்ட சீட் நிச்சயமாக எங்களுக்குத்தான். இல்லையா?"

"சீட் உங்களுக்கேதான். துண்டை மாத்திரம் முனுசாமிகிட்டே திருப்பிக் கொடுத்தா சரி"

"துண்டு போடறதுக்கு முன்னாடி துட்டு கொடுக்கணும். இல்லீங்களா செம்பகமூர்த்தி?"

"அதேதானுங்க." (துட்டு என்றால், தமிழக ஸ்லாங்கில் பணம்)

விஷயம் சொல்லப்பட்டவுடன் மூன்று அம்மணிகளும் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். நானும் மற்றய நண்பரும் துண்டு ரிசேர்வேஷனுக்குத் தயார் என்று சொல்லிவிட்டதால் இப்போது, முடிவு எடுக்க வேண்டியவர்கள் மற்றய மூன்று பேருந்தானே.

"ஷால் வீ டு இட்" "ஈஸ் இட் ரிஸ்கி" என்றெல்லாம் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். "நம்ம பாப்பாங்க இங்கிலிபீசு பேசறாங்க" என்றார் செம்பகமூர்த்தி. இறுதியில் துண்டு முன்பதிவுக்கு எல்லோரும் சம்மதித்து விட்டோம்.

செம்பகமூர்த்தி சொன்னபடி தலைக்கு பத்துரூபா என்றால் ஐந்து பேருக்கு ஐம்பது ரூபா. மொத்த வியாபாரம் என்பதால் ஹோல்சேல் டிஸ்கவுன்ட் கொடுத்து 45 ரூபாவுக்கே விஷயத்தை முடித்துக் கொடுப்பதாகக் கூறிவிட்டார்.

"சரி. போட்டர் முனுசாமி எங்கே"

"அவுரு சல்பேட்டா சாப்பிட போயிருக்காருங்க. பத்து மணிக்கு மேலேதான் வருவாரு. உங்களுக்கு வண்டி பதினொன்றரைக்குத்தானே. இதே இடத்துக்கு பத்தரைக்கு வந்துருங்க. முனுசாமியை கூட்டி வாரேன்" என்றார் செம்பகமூர்த்தி.

"சல்பேட்டாவா? அது என்னங்க?" கேட்டேன் நான்.

"அது ஒரு வகை உற்சாக பானமுங்க. பாட்டியெல்லாம் போட்டுக் காச்சுறதுங்க. ஒரு கிளாஸ் போட்டா கும்முன்னு ஆளைத் தூக்கும். நம்ம போட்டர் முனுசாமி தாங்கு சல்பேட்டா போட்டுவிட்டு, உங்களுக்கு துண்டு போடுவாருங்க".

இப்போது நேரம் ஏழரைமணி. பத்தரை மணிவரை என்ன செய்வது? வெளியே போய் மதுரையை சுற்றிப் பார்க்கலாமா? கையிலிருக்கும் சூட்கேஸ்களை என்ன செய்வது?

"அதுக்கு டேசனிலேயே (ஸ்டேஷனைத்தான் சொல்கிறார்) கிளாக் ரூமு இருக்குங்க. ஒரு சூட்கேசுக்கு எட்டணா கொடுத்தா ரிசீது தருவாக. வெச்சுட்டு போகலாம்" என்றார் செ.மூ. (எட்டணா என்பது ஐம்பது பைசா. நூறு பைசா ஒரு ரூபா)

"அதுகூட நல்ல ஐடியாதான்"

"எங்கே போகலாம்" என்றார் சுகந்தி.

"முதலில் இப்படி நேராக நடந்து போகலாம். போகும் வழியில் என்ன இருக்கிறது என்று பார்க்கலாம்"

"ஷொப்பிங் போகலாமா?"

"அக்கா, உங்களுக்கு புண்ணியமாகப் போகும். புடவைக் கடைக்குள் மாத்திரம் புகுந்து விடவேண்டாம்" என்றேன் நான். இவர்களுக்கு அப்படி ஏதாவது ஒரு ஐடியா இருந்தாலும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில்.

"நாங்கள் மதுரையில் சாரி வாங்கப் போகிறோம் என்று உங்களிடம்

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

சொன்னோமா... சொன்னோமா?" ஆகா. சண்டை தொடங்கிவிட்டார் சீமாட்டி.

"நீங்கள் சொல்லவில்லை. ஆனாலும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான்"

"எச்சரிக்கை செய்கிறேன். நீங்கள் செய்த அடாவடித்தனங்கள் பற்றி எங்களுக்குத் தெரியாதா? நீங்கள் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கத் தயாரா?"

"என்ன அக்கா பேச்சு ஒரு மாதிரியாக மாறுது" கேட்டபடி நடந்துவந்த பாதையை திரும்பிப் பார்த்தேன். நாலைந்து சைக்கிள் ரிக்ஷாக்கள் தெரிந்தன. அதைவிட விசேஷமாக எதுவுமில்லை. "என்ன அக்கா... நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து விட்டேன்... எதுவுமில்லையே"

"ஐயையோ. அது நான் சொல்லியதல்ல. அங்கேயிருந்து வருகிறது குரல்"

திரும்பிப் பார்த்தால், வீதியோரமாக ஒரு மேடை. அதில் மைக் பிடித்தபடி ஒரு பெண் முழங்கிக் கொண்டிருந்தார்.



"சவாலை ஏற்கத் தயாரா? கடந்து வந்த அரசியல் பாதையை திரும்பிப் பாருங்கள். எத்தனை கட்சித் தொண்டர்களை பழிவாங்கியிருப்பீர்கள். எத்தனை கட்சிகளை உடைத்திருப்பீர்கள்..." ஆகா. அரசியல் கட்சிக் கூட்டம்.

இதற்கிடையே நாங்கள் கட்சிக் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அருகே வந்துவிட்டோம். கொஞ்சம் பார்த்துவிட்டுப் போகலாமா?

"ஏனுங்க, இவங்க யாருங்க? மேடையிலே இந்தப் போடு போடறாங்க" மேடைக்கு அருகே சிவப்புக் கரை வேட்டியில் நின்ற ஆளைக் கேட்டேன்.

"மேம்புலியூர் சரோசாவுங்க" என்றார் மிகமிகப் பெருமையாக!

"இந்தம்மா எந்தக் கட்சிங்க" என்று நான் கேட்க, அந்த ஆள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். "மேம்புலியூர் சரோசா எந்தக் கட்சின்னு மருதை பூராவும் தெரியுமே. என்ன வெளையாடுறீங்களா?"

"நான் வெளியூருங்க. மேம்புலியூர் எந்த திசையிலே இருக்கு என்றுகூட தெரியாதுங்க. இது எந்தக் கட்சியின் பொதுக் கூட்டமுங்க"

"எந்தக் கட்சியா? ஹா! அதோ மேடையில் இருந்த கொடியைப் பாருங்க. அதுவும் தெரியலையா, இதோ என் கையில் இருப்பதைப் பாருங்க" என்றார் அவர். அவர் கையில் தூக்கிக் காட்டிய பொருளைப் பார்த்தவுடன் வெலவெலத்துப் போனேன். காரணம், அது ஒரு அரிவாள்.

"ஏனுங்க, தெரியாமல் எந்தக் கட்சி என்று கேட்டுட்டேன். அதற்காக அரிவாளை எடுத்து வெட்ட வர்றீங்களே. இது உங்களுக்கே நல்லாயிருக்கா" என்றேன் நடுக்கத்துடன். ஒருவேளை மதுரையில் இந்தக் கட்சியைத் தெரியாதவர்களை ஒரே சீவாக சீவி விடுவார்களோ?

"அடச்சீ, உங்களை வெட்ட அரிவாள் காமிக்கலைங்க. இதுதான் நம்ம கட்சி சின்னமுங்க. அரிவாள் சுத்தியல். கம்மியூனிஸ்ட் கட்சி. அதோ மேடையிலே பாருங்க சிவப்பு கொடி பறக்குது தோழரே."

அதன் பிறகுதான் எனக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

மதுரையில் மூன்று பிரபல்யமான விஷயங்கள் இருக்கின்றன. அதை அடுத்த அத்தியாயத்தில் சொல்வேன். அந்த மூன்றையும் கடந்து நான்காவதாக மற்றுமோர் விஷயமும் பிரபல்யம். அந்த நான்காவது விஷயம், கம்மியூனிசம்.

நாலாதிசையிலும் ஆலயங்கள் இருக்கும் மதுரையில் இவர்களுக்கு எப்படி இந்த அளவு செல்வாக்கு வந்தது என்று ஆச்சரியப்படும் விதத்தில் மதுரையில் கம்மியூனிஸ்ட் கட்சிக்கு செல்வாக்கு இருந்தது. தமிழகத்தில் நடைபெறும் தேர்தல்களில் கம்மியூனிஸ்ட்கள் 'இங்கொன்றும் அங்கொன்றுமாக' எங்காவதுதான் ஜெயிப்பார்கள். ஆனால், அந்த இங்கொன்றும் அங்கொன்றுமான இடங்களில் மதுரை கண்டிப்பாக இருக்கும்.

"நீங்க எந்தக் கட்சிங்க" என்று ஆவலாக கேட்டார் நான் பேச்சுக் கொடுத்த சிவப்புக் கரை வேட்டி அணிந்த கம்மியூனிஸ்ட்.

"நமக்கு இந்த ஊர் இல்லீங்க. நான் வெளிநாட்டுக்காரன்."

"வெளிநாடா? எந்த நாடுங்க."

"ஸ்ரீலங்கா சார்."

"ஸ்ரீலங்காவிலே நீங்க எந்தக் கட்சி"

என்ன சொல்லலாம்? ஏதாவது கம்யூனிஸ்ட் சார்பான கட்சியாகச் சொல்வதுதான் பாதுகாப்புக்கு உத்தரவாதம். இலங்கையில் கம்யூனிஸ்ட் சார்புக் கட்சி எது என்று நான் யோசிக்கத் தொடங்க, அந்த ஆள் கோபமாகி விட்டார். கம்மியூனிஸ்ட்களுக்கு உடனே கோபம் வந்துவிடும் போலும்.

"எங்க கட்சிக் கூட்டத்துக்கே வந்து இது எந்தக் கட்சி என்று கேள்வி கேட்கிறீங்க. நாங்க உங்களைக் கேட்டா சொல்ல மாட்டீகளா? ஸ்ரீலங்காவிலே எந்தக் கட்சியய்யா நீரு? சொல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டு உசிரோடு போகமுடியாது."

இவரது சத்தத்தைக் கேட்டு அருகில் நின்றிருந்த வேறு சில செந்தோழர்களும் எங்களை நோக்கி வந்துவிட்டார்கள். அவர்கள் கைகளிலும் அருவாள்!

"யோவ். ஸ்ரீலங்காவில எந்தக் கட்சியய்யா நீரு?"

"நான். நான்..." ஐயோ... எந்தக் கட்சியைச் சொல்லலாம்... அவசரத்துக்கு ஒரு கட்சியின் பெயரும் ஞாபகத்துக்கு வரவில்லை.

"சீக்கிரம் சொல்லுமய்யா" அவசரப்படுத்தினார் கம்மியூனிஸ்ட்.

ஆஹா... இதோ ஞாபகம் வந்திருச்சு... "நம்ம கட்சியின் பெயர் ஜே.வி.பி"

'சே வி பி யா? செவப்பியா"

"செவப்பி இல்லீங்க, ஜே.வி.பி... ஜனதா விமுக்தி பெரமுனா. அருமையான சூப்பர் கம்மியூனிஸ்ட் கட்சிங்க அது தோழரே"

இப்படி இலங்கையில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட் சார்புக் கட்சியின் பெயரைச் சொல்லிவிட்டாலும், எனக்கு திக் திக் என்றது. இவர்கள் தீவிர கம்யூனிஸ்ட்கள் போல இருக்கிறார்களே... ஒருவேளை ஜே.வி.பி.யின் கொள்கைகள் என்ன என்று கேட்டால் என்ன சொல்வது என்றுதான் திக் திக்.

கேட்டே விட்டார்கள். "ஜே.வி.பி கட்சியின் கொள்கை என்னங்க?

அதற்கு அடுத்த அத்தியாயத்தில் பதில் சொல்கிறேன், அடுத்த வாரம் படித்துப் பாருங்கள்... (தொடரும்)






அத்தியாயம் 15

## இந்த வியாபாரத்தில் யாராவது தமது பெயரை சொல்வார்களா?

எட்வார்ட்டை பிளாக்மெயில் செய்துவிட்டுத் திரும்பிய கிளீன் வில்லி பதட்டத்தில் இருந்தார். சொர்க்கத்தின் பல் (Heaven's tooth) என்ற பெயருடைய மலிவான மதுச்சாலை ஒன்றில் மது அருந்தி விட்டு வெளியே வந்தபோது இரவு ஏழுமணி. இருட்டி விட்டிருந்தது. வீதியில் இறங்கி கட்டடங்களின் நிழல்களின் ஊடாக நடந்தார். மற்றவர்களது பார்வை தன் மீது விழுவதை அவர் விரும்புவதில்லை. காரணம், என்னதான் ஸ்காட்லென்ட் யார்ட் துப்பறியும் இலாகாவினர் அவருடன் தொடர்பு வைத்திருந்தாலும், பிரிட்டிஷ் போலீசைப் பொறுத்தவரை அவர் சிறையிலிருந்து தப்பித் தலைமறைவாகவுள்ள கைதி.

எந்த நிமிடமும் மறுபடி கைது செய்யப்படலாம்.

நகரின் ஒதுக்குப்புறமாக இருந்த ஹோலிபோன்ட் பகுதியை அடைந்தவர், நடுத்தர வகுப்பினர் வசிக்கும் கட்டடத் தொகுதியை அடைந்தார். அந்த இடம் இருளில் மூழ்கியிருந்தது. இந்த நேரத்தில் அங்கே நடமாட்டம் பெரிதாக இருப்பதில்லை. அதற்காகத் தான் அப்படியான இடத்தை வசிப்பதற்குத் தேர்ந்தெடுத்திருந்தார்.

கட்டடத்தின் படிக்கட்டுக்கள் இருந்த இடத்துக்கு அருகே சென்றார். மங்கலாக ஒரேயொரு வெளிச்சம் மாத்திரம் இருந்தது. அந்தச் சூழ்நிலை கிளீன் வில்லிக்கு 'ஏதோ தவறு இருக்கிறது' என்பதுபோல ஒரு உணர்வைத் தந்தது.

வழமையாக இந்தப் படிகளில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். இன்று யாரையும் காணவில்லை.

படிகளில் ஏறத் தொடங்கிய கிளீன் வில்லி எதிரே யாரோ இறங்கி வருவதை, முதலில் கவனித்தார். எதிரே வந்த நபரின் முகம் மங்கலான வெளிச்சத்தில் தெரியவில்லை. படிகளில் மேலேறினார். எதிரே வந்த உருவம் கீழிறங்கியது. இருவரும் படிகளின் நடுவே ஒருவரையொருவர் கடந்து செல்ல வேண்டிய இடம் வந்தபோது, எதிரே வந்த நபர் கடந்து செல்லவில்லை. கிளீன் வில்லியை வழி மறித்தது போல நின்று கொண்டார்.

"யாரது" கிளீன் வில்லி பயத்துடன் நிமிர்ந்து பார்த்தார். எதிரே நின்ற நபரின் முகத்தில் இருந்த பெரிய வெட்டுக்காயம்தான் முதலில் தெரிந்தது.

இவர் அட்கர் அல்லவா? எட்வார்ட்டுடன் இந்த நபரைக் கிளீன் வில்லி சில தடவைகள் பார்த்திருக்கிறார். எட்வார்ட்டுக்கு குதிரை வண்டி செலுத்தும் சாரதி!

"எட்வார்ட் அனுப்பி வைத்தாரா" என்று தயக்கத்துடன் கேட்டார் கிளீன் வில்லி.

"ஆம். உங்களை அனுப்பி வைக்க" கரகரத்த குரலில் வந்தது பதில்.

"எங்கே" இதுதான் கிளீன் வில்லி பேசிய கடைசிச் சொல். அதற்குப் பிறகு அவரது வாயில் இருந்து குரல் வராதபடி கழுத்தில் கயிறு ஒன்று இறுகியது. சுமார் 60 விநாடிகளில் கிளீன் வில்லியின் உயிர் பிரிந்தது.

நியூகேட் சிறைச்சாலையில் இருந்து எட்வார்ட்டினால் தப்புவிக்கப்பட்டு, உலகின் முதல் பிரமாண்ட ரயில் கொள்ளைக்கான முன்னேற்பாடுகளில் வெற்றிகரமாக ஈடுபடுத்தப்பட்ட கிளீன் வில்லி, ரயில் கொள்ளையடிக்கப்பட்டதைப் பார்க்க உயிருடன் இருக்கவில்லை. ரயில் கொள்ளைக்கான முதலாவது உயிர்ப்பலியாக மாறிப்போனார்.

ஆனால், கிளீன் வில்லி மூலமாக ஸ்காட்லென்ட் யார்ட்டுக்கு ஏற்கனவே ஒரு சந்தேகம் துளிர்விட்டிருந்தது. "யாரோ, ஏதோ திட்டமிடுகிறார்கள்! அது பெரிய திட்டமாகவும் இருக்க வேண்டும்!! ஆனால் யார் என்றும் தெரியவில்லை. திட்டம் என்னவென்றும் தெரியவில்லை" என்ற அளவில் மட்டுமே!

சரி, வாருங்கள். இப்போது அந்த நாளைய லண்டனின் மற்றொரு பகுதிக்குப் போகலாம்.

அந்த நாட்களில் லண்டன் நகரில் பட்டர்வோர்த் என்ற இடத்தில் வீதியோரமாக வரிசையாக இருந்த சிறிய கடைகள் அனைத்துமே ஒரே மாதிரியான வர்த்தகம் செய்யும் கடைகள். பொருட்களை வாங்கிக் கொண்டு அதன் பெறுமதிக்கான பணத்தை கடன் கொடுக்கும் கடைகள் (அடகு பிடிக்கும் கடைகள்)

பொதுவாகவே நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆட்கள்தான் இப்பகுதியில் நடமாடுவார்கள். 8 பவுண்ட்ஸ் விலையுள்ள கோட் ஒன்றையோ, நான்கரைப் பவுண்ட்ஸ் பெறுமதியுள்ள தங்கச் செயின் போட்ட கடிகாரம் ஒன்றையோ கொடுத்துவிட்டு, சில ஷில்லிங்ஸ் பணத்தைக் கடனாகப் பெற்றுச் செல்வார்கள். அந்த வாரச் சம்பளம் வந்ததும் (சம்பளம் வாராவாரம் வெள்ளிக்கிழமை) பொருட்களை மீட்டுச் செல்ல வந்துவிடுவார்கள்.

வெள்ளிக்கிழமை சம்பளம் வந்து வீட்டுக்குப் போகும் கோட், சனிக்கிழமை பார்ட்டி ஒன்றில் அணியப்பட்டபின், மறுபடியும் திங்கட்கிழமையே அடகு வைக்க கடைக்கு வந்துவிடுவதும் உண்டு (ஞாயிறு கடை விடுமுறை).

இந்தப் பகுதியில் குதிரை வண்டி ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இறங்கியவர் பார்வைக்குப் பெரிய பணக்காரர் போன்ற தோற்றத்தில் இருக்கவே, வீதியில் சென்ற பலரும் அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். கடைக்காரர்களும் கண்ணாடி ஜன்னலூடாக எட்டிப் பார்த்தார்கள். குதிரை வண்டியில் வந்து இறங்கும் அளவுக்கு வசதியுள்ள ஒருவர் எதற்காக அடகு பிடிக்கும் கடைகள் உள்ள பட்டர்வோர்த் கடை வீதிக்கு வருகிறார் என்ற ஆச்சரியம்



அடுத்த பக்கம் வாருங்கள் ➡

அங்கு பலருக்கு ஏற்பட்டிருந்தது. குதிரை வண்டியில் இருந்து இறங்கிய பெரிய மனிதர் வேறு யாருமல்ல, நமது கதாநாயகன் எட்வார்ட்தான்.

வண்டியில் இருந்து இறங்கிய எட்வார்ட் கடைகளின் போர்ட்களைப் பார்த்தபடி நடந்தவர், ஒரு இடத்தில் நின்றார். அவர் எதிர்பார்த்துச் சென்ற கடையின் பெயர் அதுவாக இருக்க வேண்டும், போர்ட்டில் பட்டர்சீ பவுன் புரோக்கர் என்று எழுதப்பட்டிருந்தது.

கடையின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். உள்ளே கடைக்காரர் மட்டுமே இருந்தார்.

"குட் ஈவினிங். வாருங்கள். உங்களுக்கு என்ன வகையான சேவையை இன்று நான் செய்ய முடியும் என்பதைத் தெரிவியுங்கள். செய்து தரக் காத்திருக்கிறேன்" என்றார் கடைக் காரர் பவ்வியமாக.

எட்வார்ட் பதில் கூறாமல் கடையை ஒருமுறை சுற்றி நோட்டமிட்டார்.

"ஏதாவது பொருளைக் கொடுத்து கடன் வாங்குவதென்றால் ஏற்பாடு செய்ய முடியும்" என்றார் கடைக்காரர்.

எட்வார்ட்டின் முகத்தில் கேலியான ஒரு புன்னகை. "பொருள் கொடுத்துப் பணம் வாங்குவதற்காக நான் வரவில்லை. பணம் கொடுத்துப் பொருள் வாங்குவதற்காக வந்திருக்கின்றேன்" என்றார் எட்வார்ட்.

"பொருள் வாங்குவதற்கா? நீங்கள் தவறான இடத்துக்கு..." கடைக்காரர் வாக்கியத்தை முடிக்கவில்லை எட்வார்ட் குறுக்கிட்டார். "தவறான இடத்துக்கு வரவில்லை. சரியான இடம் இதுதான் என்ற தகவல் இருக்கிறது"

"நல்லது. என்ன விதமான பொருளை வாங்க உத்தேசித்து இருக்கிறீர்கள் என்று அறியலாமா?"

"என்ன விதமான பொருட்களை நீங்கள் விற்க வைத்திருக்கிறீர்கள்"

"இதோ சுற்றிப் பாருங்கள். இந்த ஷோகேஸ்களில் இருக்கும் பொருட்கள்தான். அதுவும் எல்லாமே விற்பனைக்கு அல்ல. சில பொருட்கள் திரும்ப ஒப்படைக்க வேண்டிய பொருட்கள். அடகு வைத்தவர்கள் எடுக்க வருவார்கள்"

"இவற்றில் எனக்கு ஆர்வமில்லை. நான் வாங்க வந்திருப்பது இரும்பால் செய்யப்பட்ட பொருள்"

"இரும்பா" குரலில் ஆச்சரியம் காட்டினார் கடைக்காரர்.

"ஆம். இரும்பு... கேள்விப்பட்டதே இல்லையா? பாதுகாப்புக்கான பொருள்"

"துப்பாக்கியா" கடைக்காரரின் குரல் மெதுவாக ஒலித்தது.

"ஆம்" தலையாட்டினார் எட்வார்ட்.

"கிடைப்பது கடினமான பொருள் ஆயிற்றே... விலை அதிகமாக இருக்குமே"

"விலையைப் பற்றிப் பிரச்சனை இல்லை. பொருள் இருக்கிறதா?"


"எடுக்கலாம். சில நாட்களாகும்" என்றார் மெதுவாக.

"எனக்குத் தேவை ஐந்து" குரலில் அலட்சியம்.

"ஐந்து துப்பாக்கிகளா" கடைக்காரர் திகைத்தார்.

"ஏன் முடியாதா" இப்போது குரலில் லேசான கேலி.

"இல்லை. எடுத்துவிடலாம். அதிக நாளாகும். வெவ்வேறு இடங்களில் இருந்து எடுத்துச் சேர்க்க வேண்டும்"



"எப்போது கிடைக்கும்" எட்வார்ட்டின் குரலில் அவசரம் தெரிந்தது.

"இரண்டு வாரங்கள் ஆகும்" என்றார் கடைக்காரர் யோசனையுடன்.

"அது சரிவராது. அதற்கு முன் தேவை. விலையைப் பற்றிக் கவலையில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்"

"எட்டு நாட்கள்? எட்டு நாட்களில் எடுக்கலாம்."

"இல்லை. அதற்கு முன்னர் அவசியம் தேவை"

"ஒரு வாரத்தில் எடுத்துக் கொடுத்தால்...?"

"ஒரு வாரம்... ஒரு வாரம்..." எட்வார்ட் யோசித்தார். "ஒரு வாரம் என்றால் அடுத்த வியாழக்கிழமை தருவீர்கள் அப்படித்தானே"

"ஆம். அடுத்த வியாழக்கிழமை"

"எத்தனை மணிக்குக் கிடைக்கும்"

"எத்தனை மணிக்கு என்பது முக்கியமா? அடுத்த வியாழக்கிழமை எத்தனை மணிக்கு எனது கைக்கு வந்து சேர்கிறதோ, அப்போது கொடுத்து விடுகிறேனே"

"எத்தனை மணிக்கு என்பது முக்கியமா இல்லையா என்பது, பணம் கொடுத்து வாங்கும் என்னைப் பொறுத்த விஷயம். நேரம் எனக்கு முக்கியம்! பொருள் எத்தனை மணிக்குக் கிடைக்கும் என்பது சரியாகத் தெரிய வேண்டும்"

"மதியம் 12 மணிக்குச் சரியாகக் கொடுத்து விடுவேன்"

"இல்லை. 10 மணி. அதற்கு மேல் 5 நிமிடம்கூட தாமதிக்க முடியாது. ஏற்பாடு செய்ய முடியுமா?" எட்வார்ட் தனது கோட் பாக்கட்டில் இருந்து ஐந்து தங்கக்காசுகளை எடுத்து மேஜையின் மேல் வைத்தார். "இது முன்பணம். 10 மணிக்குத் தர முடியுமா?"

கடைக்காரர் தங்கக்காசுகளைப் பார்த்தார்.

"சரி. ஏற்பாடு செய்யலாம் அடுத்த வியாழக்கிழமை. காலை 10 மணி"

"சொன்னால், சொன்னதுபோல நடந்து கொள்ள வேண்டும். நான் பார்வைக்குத்தான் பெரிய மனிதர் போலிருப்பேன். எனக்கு மற்றுமொரு முகமும் இருக்கிறது. அது கொஞ்சம் வன்முறையான முகம்"

"நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. பணம் வாங்கிவிட்டால் நான் எப்படியாவது சொன்ன சொல்லைக் காப்பாற்றி விடுவேன். வியாழன்! காலையில் நீங்களே வருகிறீர்களா? மீதிப் பணத்தை எப்படிக் கொடுப்பீர்கள்"

"தங்க நாணயங்கள்தான். வியாழன் வரப்போவது நானா என்பதை வியாழன்தான் பார்த்துக் கொள்ளுங்கள்"

"மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறீர்கள். நல்லது. உங்களுடைய பெயர் சொல்லவில்லையே. எனது பெயர் வில்லியம்"

"வில்லியம்... இந்த வியாபாரத்தில் யாரும் நமது பெயரைச் சொல்ல மாட்டார்கள்" எட்வார்ட் கூறியபடியே கதவைத் திறந்து கடைக்கு வெளியே சென்று கூட்டத்தில் கலந்து மறைந்தார்.

இந்த அத்தியாயம் இத்துடன் முடியவில்லை. இன்னும் ஒரு முக்கிய விஷயம் உள்ளது.

திருட்டுத்தனமாகத் துப்பாக்கி விற்கும் கடைக்காரர் வில்லியம், ஸ்காட்லென்ட் யார்ட் துப்பறியும் பிரிவின் இன்ஃபோர்மர்! தகவல் கொடுக்கும் ஆள்!!

அவர் மூலமாக ஸ்காட்லென்ட் யார்ட்டுக்குத் தகவல் போனது, "பெரிய மனிதர் ஒருவர் (பெயர் தெரியாது) கையில் பணத்துடன் 5 துப்பாக்கிகள் அவசரமாக வாங்கத் திரிகிறார். வியாழன் காலை 10 மணிக்கு முன்னர் துப்பாக்கி தேவை. வியாழன் 10 மணிக்குப் பின்னர் லண்டனில் ஏதோ நடக்கப்போகிறது"... (தொடரும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!




# சூப்பர் மார்க
# தந்திரங்

இந்தக் கட்டுரைத் தொடரைப் படிக்கத் தொடங்கும் நீங்கள் இலங்கையின் எந்தப் பகுதியில் இருந்து படிக்கிறீர்கள், அல்லது எந்த நாட்டில் இருந்து படிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், எந்த நாட்டிலிருந்து படித்தாலும், இதில் கூறப்படும் விஷயம் உங்களுக்குப் பொருந்தும். காரணம், இந்தக் கட்டுரைத் தொடர், உலகின் எந்த நாட்டிலும் உள்ள சூப்பர் மார்க்கெட்களில் செய்யப்படும் வியாபார தந்திரங்கள் பற்றியது.

20 வருடங்களுக்குமுன் மேலை நாடுகளில் மாத்திரமே பிரபலமாக இருந்த சூப்பர் மார்க்கெட்கள் இப்போது ஆசிய நாடுகளிலும் தடுக்கி விழும் இடங்களில் எல்லாம் வந்துவிட்டன. ஒருகாலத்தில் இலங்கைப் பாவனையாளர்களின் தேவைகளை முழுமையாகக் கவர் செய்தவை சிறிய மளிகைக் கடைகள்தான். இப்போது அந்த இடத்தைப் பிடித்திருக்கின்றன சூப்பர் மார்க்கெட்கள். சிறிய நகரங்களில்கூட சூப்பர் மார்க்கெட்கள் வந்துவிட்டன.

உலகின் பிரபல சூப்பர் மார்க்கெட் செயின்கள் இலங்கையில் கடை விரிக்கத் தொடங்குகின்றன. அல்லது, ஒரு இலங்கைப் பார்ட்னருடன் சேர்ந்து சூப்பர் மார்க்கெட் செயின்களை அமைத்திருக்கின்றன (உதாரணம், கார்கில்ஸ் ஃபூட் சிட்டி). இதைத்தவிர இலங்கை வர்த்தகர்கள் சிலரும் அச்சு அசலாக மேலைநாட்டுப் பாணியில் சூப்பர் மார்க்கெட்களைத் திறந்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் நீங்கள் வசிப்பது எந்த நாடாக இருந்தாலும், சூப்பர் மார்க்கெட்கள் உங்கள் வாழ்க்கையில் அவசியமான ஒன்றாகி விட்டது.

இலங்கையில் எமது பரபரப்பு அலுவலகம் இருக்கும் இடத்தில், ஒரு சிறிய கடை இருக்கிறது. கல்லாப் பெட்டியில் சில போத்தல்களில் பொருட்கள் இருக்கின்றன. கடையின் முன்புறம் ஒரு ஷோகேஸில் சில பொருட்கள் அடுக்கி வைக்கப் பட்டிருப்பது தெரிகிறது. அவ்வளவுதான், டிஸ்பிளே!

அதாவது, கடைக்குள் உள்ள பொருட்களில் பாவனையாளர்களின் கண்களில் படும் அளவுக்குக் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்கள் அவ்வளவுதான்.

அந்தச் சிறிய கடையில் விற்பனைக்குத் தயாராகவுள்ள பொருட்களில், பாவனையாளர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்கள் வெறும் 10 முதல் 15 சதவீதம்தான். மீதிப் பொருட்களை நீங்கள் கேட்டால் மட்டுமே கடையின் உரிமையாளர் கீழேயிருந்தோ, வேறு எங்கோ இருந்தோ எடுத்துத் தருவார்.

அவரிடம் விற்பனைக்குத் தயாராக உள்ள பொருட்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்படும் வசதி (பெரும்பாலும் இடவசதி) மாத்திரம் அந்தக் கடை உரிமையாளருக்கு இருந்திருந்தால், அவரது விற்பனை 200 முதல் 300 சதவீதம் வரை அதிகரிக்கும் என்பது, கடை உரிமையாளருக்குத் தெரியுமா? இதை நாம் சொல்லவில்லை. கனேடியப் பாவனையாளர் நலன் சபையின் ஆய்வு கூறுகிறது.

50 ஆண்டுகளுக்கு முன், மேலை நாடுகளிலும் இதுபோன்ற சிறிய கடைகள்தான் இருந்தன. ஆனால், இப்போது ஒன்றுகூட இல்லை. காரணம், கடையில் உள்ள பொருட்களைக் காட்சிப்படுத்தும்போது கிடைக்கும் விற்பனை எகிறல் அங்குள்ள வர்த்தகர்களுக்குத் தெரிந்துவிட்டது.

இலங்கையின் சிறிய நகரங்களிலும் சூப்பர் மார்க்கெட்கள் வந்துவிட்ட நிலையில், இன்னும் சில ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். ஒரு கட்டத்தில், இப்போது மேலை நாடுகளில் உள்ளதுபோல 100 சதவீதப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படும் கடைகளாக மாறிவிடும்.

இந்த சூப்பர் மார்க்கெட் கலாச்சாரம், அநேக மேலை நாடுகளில் ஒரே காலப்பகுதியில் தோன்றினாலும், அவற்றின் விற்பனை உத்திகள் தோன்றியது, வட அமெரிக்காவில்தான் (அமெரிக்கா, கனடா). அதாவது, பாவனையாளர்களைப் பொருட்களை வாங்கத் தூண்டும் தந்திரங்கள் வட அமெரிக்காவிலேயே முதலில் செய்யப்பட்டன. இப்போது இலங்கைவரை வந்துள்ளன அந்தத் தந்திரங்கள்.

இந்த விற்பனைத் தந்திரங்கள் அனைத்துமே, மனித மனோதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. இப்படியொரு தந்திரம் செய்யப்படுகிறது என்பது பாவனையாளர்களுக்கு வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், பாவனையாளர்களைப் பொருட்களை வாங்கத் தூண்டும் தந்திரங்கள் அவை. அவற்றைத்தான் இந்தத் தொடரில் பார்க்கப் போகின்றோம்.

விற்பனைத் தந்திரங்கள் வட அமெரிக்காவில் இருந்து தோன்றியவை என்பதால், நாம் கூறப்போகும் உதாரணங்கள் பல கனடாவை மையமாகக் கொண்டவை. அதன்

இலங்...
பார்க்க...

வட அ...
சுமார்...
கனேடி...
ஒரு ச...
கிட்டத்...
டதாகத்...
அதிகப...


இந்தத்...
சிலருக்...
வருமா...
சதவீத...


"சரி. இ...
செலவு...
படிக்க...
டியப் ப...

அந்தத்...
மார்க்கெ...
யின் 8...
ஆகப்...

அதாவ...
டொலரு...
1000 ...
காமல்...
எறியும்...
பாக்கட்...

விஷய...
தரவு இ...





# ர்க்கெட்
# ங்கள்



வனையா
தம்தான்.
கீழேயி
சிப்படுத்
ாளருக்கு
கரிக்கும்
ல. கனே
கள்தான்
் உள்ள
ங்குள்ள
லையில்,
ட்டத்தில்,
காட்சிப்ப
காலப்ப
அமெரிக்
ருட்களை
ப்பட்டன.
டிப்படை
ாவனை
ர்களைப்
இந்தத்
ன்பதால்,
. அதன்

இலங்கை வடிவத்தை இலங்கையில் உள்ள சூப்பர் மார்க்கெட்களில் நீங்கள் பார்க்க முடியும்.

வட அமெரிக்காவில் வசிப்பவராக நீங்கள் இருந்தால் உங்கள் குடும்ப வருமானத்தில் சுமார் 25 சதவீதம் வரை நீங்கள் செலவு செய்வது சூப்பர் மார்க்கெட்களில் என்கிறது கனேடியப் பாவனையாளர் அமைச்சினால் வெளியிடப்பட்ட ஒரு புள்ளிவிபரம். இது ஒரு சராசரி சதவீதம். ஐரோப்பாவிலும் மற்றைய மேலை நாடுகளிலும் இருப்பதும் கிட்டத்தட்ட இதே சராசரிதான். இலங்கையில் இப்படியொரு புள்ளிவிபரம் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நீங்கள் இலங்கையில் செலவு செய்வது இதைவிடச் சற்று அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம்.

இந்தத் தொகை ஆளாளுக்கு அல்லது வேறு வேறு குடும்பங்களுக்கு வேறுபடும். சிலருக்கு வருட வருமானத்தில் 30 சதவீதமாக இருக்கலாம். வேறு சிலருக்கு வருட வருமானத்தில் 20 சதவீதமாக இருக்கலாம். புள்ளிவிபரப்படி கனேடிய ஆவரேஜ் 25 சதவீதம்.

"சரி. இதற்கு என்ன செய்வது? வாழ்க்கைச் செலவு அப்படி" என்று வழமைபோல செலவு செய்துகொண்டு இருப்பதானால், நீங்கள் இந்தக் கட்டுரைத் தொடரைப் படிக்க வேண்டியது அவசியம் அல்ல. அவசியம் எங்கே வருகிறது என்றால், கனேடியப் புள்ளிவிபரம் கொடுக்கும் மற்றொரு தரவில்!

அந்தத் தரவு என்ன? மொத்த வருமானத்தின் 25 சதவீதத் தொகையை சூப்பர் மார்க்கெட்டில் செலவு செய்யும் ஒரு குடும்பத்தில் செலவு செய்யும் முழுத்தொகையின் 80 சதவீதம்தான் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. மிகுதி வேஸ்ட் ஆகப் போய்விடுகிறது. அடடா!

அதாவது நீங்கள் கனடாவில் 5000 டொலருக்கு ஷொப்பிங் செய்திருந்தால் 4000 டொலருக்கு வாங்கும் பொருட்களைத்தான் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். மிகுதி 1000 டொலர் பெறுமதியான பொருட்களை வீணடிக்கிறீர்கள் அல்லது உபயோகிக்காமல் எறிகிறீர்கள். இதில் பத்து நாட்களுக்குமேல் ஃபிரிட்ஜில் வைத்துவிட்டு அழுகி எறியும் தக்காளி முதல், 2 வாரம் கண்டுகொள்ளாமல் விட்டு வைத்திருந்த பாதிப் பாக்கட் பால் எக்ஸ்பயரி திகதி முடிந்து எறிவது வரை அடங்கும்.

விஷயம் அத்துடன் முடிந்துவிடவில்லை. கனேடியப் புள்ளிவிபரத்தில் மேலும் ஒரு தரவு இருக்கிறது. அதன்படி, நீங்கள் செலவு செய்யும் தொகையின் 10 சதவீதம், நீங்கள் தேவையில்லாமல் வாங்கும் பொருட்களில் செலவாகின்றது. அதாவது வருடத்திற்கு 5000 டொலர் செலவு செய்தால், சுமார் 500 டொலர் பெறுமதியான பொருட்களை நீங்கள் தேவையில்லாமல் அல்லது அவசியமில்லாமல் வாங்குகிறீர்கள். மிகச் சுலபமாகத் தவிர்க்கக்கூடிய செலவு இது.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தீர்கள் என்றால் இந்தக் கணிப்பு இலங்கையிலும் சரியானது என்பது புரியும்.

'மலிவாகப் போட்டிருக்கிறார்கள்', அல்லது 'இந்த வாரம் மாத்திரம் இந்தப் பொருள் தள்ளுபடி விலையில் இருக்கிறது' என்ற ஒரே காரணத்துக்காக வாங்கப்படும் பொருட்கள் இந்த வகை. அதே நேரத்தில், புதிதாக அறிமுகம் செய்கிறோம் என்று விளம்பரம் செய்யப்படும் பொருட்களின் விளம்பரத்தால் கவரப்பட்டு வாங்கப்படும் பொருட்களும் இந்த வகையில் வரும்.

இந்த 10 சதவீத பொருட்களின் தள்ளுபடி விலை விளம்பரங்கள் உங்கள் கண்ணில் தட்டுப்படாது இருந்திருந்தால், சூப்பர் மார்க்கெட்டில் இவை உங்களின் கைகளில் தட்டுப்பட்டிருக்காது. உங்கள் வீடுவரை வந்துமிருக்காது.

மேலேயுள்ள தரவுகள் இரண்டையும் கூட்டினால், சூப்பர் மார்க்கெட்களில் நீங்கள் செலவு செய்யும் பணத்தில் சுமார் 30 சதவீதத்தை வேஸ்ட் செய்கிறீர்கள். இது ஒருபுறம் இருக்க, மிகுதி 70 சதவீதம் செலவு செய்து நீங்கள் வாங்கிவரும் பொருட்களின் நிஜமான பெறுமதி அதுதானா? – அதை வேறுவிதமாகக் கேட்டால், நீங்கள் வாங்கிய பொருட்களை அதைவிட மலிவாக வாங்கியிருக்க முடியாதா?


நீங்கள் எந்தளவுக்கு ஷொப்பிங் புலி என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு சராசரிப் பாவனையாளர் என்று வைத்துக் கொண்டால், நீங்கள் சாதாரணமாக வாங்கும் அதே பொருட்களை 15 சதவீதம் குறைவான விலையில் வாங்குவது சாத்தியம் என்கிறது ஒரு இந்திய கொன்சியூமர் ஆய்வு.

சில்லறை வர்த்தகத்தில் இதைச் சொல்வது ஃபிளெக்ஸ் ப்ரைசிங் (flex pricing) என்று. அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், சூப்பர் மார்க்கெட்களில் செய்யப்படும் வியாபார தந்திரங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அவற்றைத்தான் இங்கு சொல்லப் போகின்றோம்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡







நீங்கள் ஒரு சூப்பர் மார்க்கெட்டுக்கு கடைசியாக எப்போது போனீர்கள்? இன்று? நேற்று? கடந்த வாரம்? அது எப்போதாக இருந்தாலும், அந்த சூப்பர் மார்க்கெட்டின் உட்புறத்தை உங்கள் மனக்கண்ணில் கொண்டுவாருங்கள்.

வழமையாக சூப்பர் மார்க்கெட்கள் எல்லாவற்றிலும், அது எந்த நகரத்தில் இருந்தாலும், பொதுவான சில அம்சங்கள் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? கவனித்திராவிட்டால் நாங்கள் இப்போது சொல்லப்போகும் சில அம்சங்கள் நீங்கள் போகும் சூப்பர் மார்க்கெட்கள் எல்லாவற்றிலும் இருக்கிறதா என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

1) சூப்பர் மார்க்கெட்களுக்குச் செல்லும் ஆட்களில் அனேகமானவர்கள் வைத்திருக்கும் ஷொப்பிங் லிஸ்டில் இருக்கும் ஒரு அவசியப் பொருள் பால். இது நீங்கள் பயன்படுத்தும் பாலாகவோ, அல்லது குழந்தைகளுக்கான பாலாகவோ இருக்கலாம். சூப்பர் மார்க்கெட்டுக்கு வருபவர்கள் தமது வருகையின் 70 சதவீதமான ட்ரிப்களில் பால் வாங்குகிறார்கள் என்கிறது புள்ளிவிபரம்.

சூப்பர் மார்க்கெட் ஒன்றின் விற்பனையில் மிகப்பெரிய பங்கு வகிப்பது இந்த மனோதத்துவ தந்திரங்கள். Consumer Psychological Tricks.

முதலாவதாகக் கூறப்பட்ட பால் விவகாரத்தையே பாருங்கள். சூப்பர் மார்க்கெட்கள், பாவனையாளர்களின் வசதிக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றால், என்ன செய்திருக்க வேண்டும்? கடைக்குள் நீங்கள் நுழைந்தவுடன் கையில் எடுக்கும் விதத்தில் பால் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் சூப்பர் மார்க்கெட்டுக்கு நீங்கள் 10 தடவைகள் சென்றால், 7 தடவைகள் பால் வாங்கச் செல்கிறீர்கள்.

ஆனால் பால் வைக்கப்பட்டிருப்பது சூப்பர் மார்க்கெட்டின் உள்ளே அதன் அடிப் பகுதியில்!

பால் வெகுதொலைவில் வைக்கப்பட்டிருப்பதன் காரணம், உங்களை சூப்பர் மார்க்கெட்டுக்கு உள்ளே அதிகதூரம் நடக்கவைப்பது.





அதை வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் 10 தடவைகள் சூப்பர் மார்க்கெட்டுக்குப் போனால் அதில் 7 தடவைகள் உங்களது ஷொப்பிங் லிஸ்ட்டில் பால் இருக்கிறது. சரி. கேள்வி என்னவென்றால், இப்படி அதிகமானவர்களால் வாங்கப்படும் பால், ஏன் சூப்பர் மார்க்கெட்டின் வாயிலுக்கு அருகிலோ, காஷியருக்கு அருகிலோ வைக்கப்பட்டிருப்பதில்லை?

2) அநேக சூப்பர் மார்க்கெட்களின் உள்ளே வாத்திய இசை ஒலிப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அப்படி ஒலிக்கும் இசை எந்த வகையான இசை என்பதைக் கவனித்திருக்கிறீர்களா. கவனித்திருந்தால் அதை இப்போது ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

3) நீங்கள் போகும் சூப்பர் மார்க்கெட்டில் சொக்லெட், சிப்ஸ், பொப்கார்ன், சூயிங்கம் ஆகியவை உள்ளே ஒரு குறிப்பிட்ட ஷெல்ஃபில் வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். ஆனால் அதே பொருட்கள் நீங்கள் பணம் செலுத்தும் காஷியருக்கு அருகிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்த்திருப்பீர்கள். ஒரே பொருட்கள் ஏன் இரண்டு வேறு வேறு இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் எல்லாம் ஏதோ தற்செயலாக சூப்பர் மார்க்கெட்களில் அமைந்து விடுவதல்ல. இவை காரணமாக அமைக்கப்பட்டிருப்பவை. காரணம், நாம் குறிப்பிட்ட மனித மனோதத்துவம்! மொத்தத்தில், மனோதத்துவ ரீதியாக உங்களை மடக்குவதுதான் திட்டம்.

ஏன் நடக்க வைக்கிறார்கள்? ஏதாவது பாதயாத்திரை பயிற்சியா? இல்லை. அதிக நேரம் உங்களை சூப்பர் மார்க்கெட்டுக்குள் தங்க வைக்க விரும்புகிறார்கள். அப்படிச் செய்தால்தான் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் அதிகநேரம் உங்கள் கண்களில் படும். அதிகநேரம் கண்களில் படும்போது, அந்தப் பொருட்கள் உங்கள் மனதில் பதியும். இதுதான் இலவச விளம்பரம்.

ஒரு புத்திசாலித்தனமான சூப்பர் மார்க்கெட்டில் நீங்கள் பார்க்கக்கூடிய மற்றொரு காட்சி இருக்கும். அது என்னவென்றால், ஸ்டோர் வாயிலில் இருந்து பால் இருக்கும் இடத்துக்கு நடந்து செல்லும் பாதையின் இருபுறமும் புரொமோஷனில் இருக்கும் பொருட்கள் மட்டுமே, உங்களின் கண்ணைக் கவரும் விதத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

இதை வேறு விதமாகச் சொல்கிறோம் பாருங்கள். புத்திசாலித்தனமான சூப்பர் மார்க்கெட் ஒன்றின் ஸ்டோர் வாயிலில் இருந்து, பால் இருக்கும் இடத்துக்குச் செல்லும் பாதையில் ஒரு குறிப்பிட்ட பிராண்ட் பொருள் மட்டுமே அந்த ரகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும்.

உதாரணமாக, இந்த வாரம் கிஸ்ட் பிராண்ட் கிரீம் கிராக்கர் பிஸ்கட் புரொமோஷனில் இருந்தால், பால் எடுக்கச் செல்லும் பாதையில் கிரீம் கிராக்கர் என்றால் கிஸ்ட் பிராண்ட் மட்டுமே இருக்கும். கிரீம் கிராக்கர் விற்பனையில் பெரிய மார்க்கெட் ஷெயார் வைத்திருப்பது, மலிபன் கிரீம் கிராக்கர்தான். ஆனால், கிஸ்ட் பிராண்ட் இந்த வாரம் புரொமோஷனில் இருந்

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

தால், அந்தப் பாதையில் கிஸ்ட் பிரான்ட் மட்டுமே காட்சிப்படுத்தப் பட்டிருக்கும். மலிபன் பிரான்ட் அதற்கு அருகில்கூட இருக்காது.

ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். இந்த புரொமோஷனில் ஐட் டங்கள் இந்த சூப்பர் மார்க்கெட்டில் விற்பனையில் இருக்கின்றன என்று பாவனையாளருக்குத் தெரியப்படுத்த சூப்பர் மார்க்கெட் நிர்வாகம் என்ன செய்ய வேண்டும்? விளம்பரம் செய்ய வேண்டும்.

பத்திரிகையிலோ, டிவியிலோ, ரேடியோவிலோ, இணையத்தளத் திலோ அதை விளம்பரம் செய்ய பணம் கொடுக்க வேண்டும். அப்படிப் பணம் கொடுத்து விளம்பரம் செய்தாலும், அந்த விளம்பரத்தை உங்களைப் பார்க்க வைத்து, சூப்பர் மார்க்கெட் டுக்கு வரவைக்கவும் வேண்டும். ஒருவேளை விளம்பரத்தைப் பார்த்து 3 நாட்களின்பின் நீங்கள் சூப்பர் மார்க்கெட்டுக்குச் செல் லும்போது, அந்த விளம்பரம் உங்களது மனதிலிருந்து மறைந்தும் விட்டிருக்கலாம்.



ஆனால், இதோ நீங்கள் பால் எடுக்கச் செல்லும் பாதையில் அவர்கள் விளம்பரப் படுத்தப்பட வேண்டிய பொருட்களையே கவர்ச்சிகரமாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். விளம்பரச் செலவு கிடையாது. பத்திரிகை விளம்பரத்தை நீங்கள் பார்த்துவிட்டு 3 நாட்களில் கடைக்கு வரும்போது அதை மறந்து விடுவீர்கள். ஆனால், இப்போது நீங்கள் கடைக்கு உள்ளே நிற்கிறீர்கள். இதோ, விளம்பரப்படுத்தப்பட வேண்டிய பொருள் உங்கள் கண் பார்வையில், கைக்கெட்டிய தொலைவிலேயே இருக்கிறது.

இலவச விளம்பரம்! உடனடி விற்பனை!!

இரண்டாவது பாலை மாத்திரம் வாங்கும் உத்தேசத்துடன் நீங்கள் சூப்பர் மார்க் கெட்டுக்குச் சென்றிருந்தால், அவை வாயிலுக்கு அருகே வைக்கப்பட்டிருந்தால் அவற்றை எடுத்து, காசைக் கொடுத்துவிட்டு நீங்கள் உங்கள் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருந்து விடுவீர்கள். சூப்பர் மார்க்கெட்டில் டிஸ்பிளே செய்யப்பட்டிருக் கும் மற்ற எந்தப் பொருளும் உங்கள் கண்களில் பட்டிருக்காது.

அதனால்தான் பாவனையாளர் அதிக தடவைகள் கட்டாயம் வாங்கியே தீரவேண்டும் என்றிருக்கும் பொருட்களை சூப்பர் மார்க்கெட்டுக்கு உள்ளே தொலைவில் வைக்கிறார்கள். அதை எடுக்கப் போகும்போது நீங்கள் மற்றைய பொருட்களையும் பார்க்கப் போகின்றீர்கள். அப்போது உங்கள் மனதில் சில எண்ணங்கள் தோன்றப் போகின்றன.

“அட... இந்தப் பொருளைத்தானே வீட்டில் மறக்காமல் வாங்கிவரச் சொன்னார்கள். நல்லவேளை இப்போதாவது கண்களில் பட்டதே”

“இந்தப் பொருள் பார்க்க நன்றாக இருக்கிறதே. சும்மா ஒரு தடவை வாங்கிப் பார்க்கலாமா?”

“ஓகோ இந்தப் பொருளும் இங்கே விற்பனையாகிறதா? எங்கே வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.”

“வாவ். இந்தப் பொருளின் விலை இவ்வளவுதானா? நான் இது அதிக விலை இருக்கும் என்று நினைத்திருந்தேன். இது நான் நினைத்ததை விட மலிவாக இருக்கிறதே. வாங்கிப் பார்க்கலாமா?”

பால் பாக்கட்டை எடுப்பதற்கு சூப்பர் மார்க்கெட்டின் கடைசி ஷெல்ஃப்வரை நடக் கும் பத்துக்கு இரண்டு பேருக்காவது மேற்கண்ட யோசனைகளில் ஏதாவது தோன் றினால் சூப்பர் மார்க்கெட்காரருக்கு வெற்றி. பத்துக்கு நான்கு பேருக்குத் தோன்றி னால் அதிஷ்டம்.

அதற்குமேல் தோன்றினால் தீபாவளி!!

பார்த்தீர்களா? எல்லாமே மனோதத்துவ ரீதியான தந்திரம்தான். அடுத்ததாக சூப்பர் மார்க்கெட்டில் ஒலிக்கும் இசை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? அதிலுள்ள மனோதத்துவத் தந்திரத்தை அடுத்த இதழில் பார்க்கலாம்.

# சிரியாவில் ராணுவத் தளம் மீது இஸ்ரேலிய விமானத் தாக்குதல்!

## பின்னணியில் ஓர் ரகசியம்!

கடந்த வார இறுதியில் சிரியாவிலுள்ள ராணுவத் தளம் ஒன்றின் மீது இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது பற்றி இரு வித ரிப்போர்ட்கள் உள்ளன. கடந்த சனிக்கிழமை இஸ்ரேலிய விமானத் தாக்குதலுக்குள்ளான ராணுவத் தளம், சிரிய ராணுவத்தின் தளம் என்ற ரிப்போர்ட்தான் முதலில் வெளியானது.

இந்த ரிப்போர்ட், சில அரபு மீடியாக்களிலும், ஹெஸ்பொல்லா இயக்கத் தால் நடத்தப்படும் அல் மனார் தொலைக்காட்சியிலும் வெளியானது.

அல் மனார் தொலைக்காட்சியில் ஹெஸ்பொல்லா இயக்கத்தின் அறிக் கையில் இந்த விஷயம் கூறப்பட்டிருந்தது. அதாவது, இது வெறும் செய்தி யல்ல, அந்த இயக்கத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு!

முதல் ரிப்போர்ட் வெளியாகி சில மணி நேரத்தில் கத்தாரில் இருந்து ஒளிபரப்பாகும் அல் ஜசீரா தொலைக்காட்சி மற் றொரு ரிப்போர்ட்டுடன் வந்தது. புதிய ரிப்போர்ட்டின்படி, இஸ்ரேலிய விமானத் தாக்குதலுக்கு உள்ளான தளம், சிரி யாவுக்கு உள்ளே அமைந்துள்ள போதிலும், அது சிரிய ராணுவத்தின் தளமல்ல. ஈரானிய ராணுவத்தின் தளம்!

அந்த ரிப்போர்ட் வெளியான உடனேயே, சிரிய அரசு ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில் ‘தமது’ ராணுவத்தளம் மீது இஸ்ரேலிய விமானங்கள் ஏவுகணை வீசின என்று குற்றம் சாட்டியிருந்தது.

இஸ்ரேல், தமது விமானங்கள் சிரியாவில் ராணுவத் தளம் ஒன்றின்மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்திவிட்டுப் பத்திரமாகத் திரும்பி விட்டன என அறிவித்தது. ஆனால், தாக்குதலுக்குள்ளான ராணுவத் தளம் எது என்பது பற்றியோ, அந்தத் தளம் எந்த ராணுவத்தின் தளம் என்றோ தகவல் எதையும் வெளியிடவில்லை.

டெல் அவிவ் நகரில் நடந்த இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சின் செய்தியாளர் மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரொனேன் மனிலிஸ்,

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

## சர்வதேச புலனாய்வு




"எமது விமானங்கள் அவற் றுக்குக் கொடுக்கப்பட்ட இலக்குகள் மீது துல்லியமான தாக்குதலை நடத்திவிட்டுத் திரும்பி விட்டன. அந்த இலக்குகள் சிரியாவில் உள்ளன. தாக்குதல் பற்றி இதற்குமேல் தகவல் ஏதும் இல்லை" என்றார்.

செய்தியாளர் ஒருவர், "இஸ்ரேலிய விமானங்கள் ஏவுகணை வீசியது ஈரானிய ராணுவத்தளம் மீது என்று ரிப்போர்ட் இருக்கிறதே" என்று கேட்டதற்கு, ரொனேன் மனிலிஸ் கொடுத்த பதில், "எமது விமானிகளுக்குக் கொடுக்கப்பட்ட இலக்குகள் மீது ஏவுகணைகளை ஏவினார்கள். அவ்வளவுதான்" என்று நழுவல் பதில் ஒன்றைக் கூறினார்.

முதலில் கேள்விகேட்ட செய்தியாளர் விடாமல், "விமானிகளுக்குக் கொடுக்கப்பட்ட இலக்குகள், சிரியாவில் உள்ள ஈரானிய ராணுவத் தளத்தில் உள்ளனவா?" என்று கேட்டபோது, "இந்தக் கேள்விக்கு நான் பதிலளிக்க முடியாது" என்றார் ரொனேன் மனிலிஸ்.

கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் இந்த மர்மம் நீடித்த நிலையில், திங்கட்கிழமை சர்வதேச உளவு வட்டாரங்களில் கூறப்படும் கதை, இந்தத் தாக்குதலில் வேறு 'ஒரு வில்லங்கமான ரகசியம்' இருப்பதைக் காட்டுகிறது. அதைக் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

தாக்குதல் நடைபெற்ற இடம், சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்ஸில் இருந்து வெறும் 12 கி.மீ. தொலைவில், தலைநகரின் தென்திசையில் உள்ளது. எல் கெஸ்வா என்ற சிறு நகரத்தில் உள்ளது அந்த ராணுவத் தளம். உளவு வட்டாரத் தகவல்களின்படி, அந்த ராணுவத் தளத்தை ஈரான்தான் உபயோகிக்கிறது. ஈரானிய ராணுவத்தின் இஸ்லாமியப் புரட்சிப் படையின் படைப்பிரிவே (Islamic Revolutionary Guard Corps) அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தது. இந்தப் படைப்பிரிவை பெர்சியன் மொழியில், செப்பா (Sepāh) என்று அழைப்பார்கள்.

சிரிய ராணுவத்துடன் இணைந்து ISIS இயக்கத்துக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுகிறது இந்தப் படைப்பிரிவு.

இஸ்ரேலிய விமானப் படையின் விமானங்கள், லெபனானின் வான் பரப்பில் பறந்து வந்தே தாக்குதலை நடத்தின. விமானங்களில் இருந்து முதலில் ஏவப்பட்ட 5 ஏவுகணைகளில் இரு ஏவுகணைகள் எல் கெஸ்வா ராணுவத் தளத்தைத் துல்லியமாகத் தாக்கின. சேத விபரம் தெரியவில்லை.

5 ஏவுகணைகள் ஏவப்பட்ட நிலையில், இஸ்ரேலிய விமானங்கள் மேலதிக ஏவுகணைகளை ஏவியபோது, டமாஸ்கஸ் நகரின் புறநகரப் பகுதியில் உள்ள சிரிய ஏவுகணை எதிர்ப்பு பட்டரிகள் இயங்கத் தொடங்கின. இதனால் இஸ்ரேலிய ஏவுகணைகள் வானில் வைத்தே அடித்து வீழ்த்தப்பட்டன. அதையடுத்து சிரியாவின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் இயங்கத் தொடங்கவே, இஸ்ரேலிய விமானங்கள் வட்டமடித்து, மீண்டும் லெபனான் வான் பரப்புக்குள் சென்று விட்டன.

இப்போது ஒரு விஷயத்தைக் கவனியுங்கள். 'தமது' ராணுவத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்கிறது சிரியா. அந்த ராணுவத் தளத்தில் குறி வைக்கப்பட்ட இடம், ஆயுதக் கிடங்கு என்றும் சிரியா கூறியிருக்கிறது. ஹெஸ்பொல்லா இயக்கத்தின் அல் மனார் தொலைக்காட்சியும் அதையே சொல்கிறது. "சிரிய ராணுவத் தளத்தின் ஆயுதக் கிடங்கு தாக்கப்பட்டது."

அல் ஜசீராவின் ரிப்போர்ட்படி, அது ஈரானிய ராணுவத் தளம். உளவுத்துறை வட்டாரங்களிலும் அதையேதான் சொல்கிறார்கள். தாக்குதல் பற்றி ஈரான் வாயே திறக்கவில்லை. தாக்குதல் நடத்தப்பட்டதை இஸ்ரேல் உறுதி செய்தது. ஆனால், இலக்கு எதுவென்று இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரம்வரை கூறவில்லை.

தாக்குதலில் தொடர்புடைய பார்ட்டிகள் யார்? இஸ்ரேல், சிரியா, ஈரான். ஆனால், இதில் தொடர்பே இல்லாத ஹெஸ்பொல்லா இயக்கம் ஏன் அறிக்கை விடுகிறது?

அதில்தான் ரகசியமே இருக்கிறது என்கிறார்கள், உளவுத்துறை வட்டாரங்களில்.

ரகசியம் என்ன? தாக்குதலுக்குள்ளானது ஈரானிய ராணுவத்தளம்தான். குறி வைக்கப்பட்டது, அங்கிருந்த ஆயுதக் கிடங்குதான். அதிலிருந்த ஆயுதங்களும் ஈரானின் ஆயுதங்கள்தான். ஆனால், அந்த ஆயுதங்கள் ஈரானிய ராணுவத்தின் உபயோகத்துக்கானவை அல்ல! ஹெஸ்பொல்லா இயக்கத்தினருக்குக் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள்!

ஹெஸ்பொல்லா இயக்கம், தனது ஆயுதங்களில் முக்கியமானவற்றை எங்கே மறைத்து வைத்திருக்கிறது? இந்தக் கேள்விக்கான பதில், யாருக்குத் தெரிகிறதோ இல்லையோ, இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்துக்குத் தெரியும்.

ஹெஸ்பொல்லாவுக்கு ஆயுதங்களை வழங்குவது, ஈரானிய உளவுத்துறை என்பது பெரிய ரகசியம் அல்ல. பெரும்பாலும் அந்த ஆயுதங்களை சிரியாவில் வைத்துத்தான் ஹெஸ்பொல்லாவிடம் கொடுக்கிறது ஈரானிய உளவுத்துறை. ஆயுதங்களை சிரியாவில் இருந்து லெபனானுக்குள் பாதுகாப்பாகக் கொண்டு போக வேண்டும். வழமையான தரைப் பாதையில் கொண்டு போனால், இஸ்ரேலியப் போர் விமானங்கள் சொல்லிச் சொல்லித் தாக்கும். இது ஹெஸ்பொல்லாவுக்குத் தெரியும். கடந்த காலத்தில் ஹெஸ்பொல்லாவின் ஆயுதங்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் மீது, இஸ்ரேலிய விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி அழித்திருக்கின்றன.

ஹெஸ்பொல்லாவின் ஆயுதங்கள் எப்போது, எந்தப் பாதையில் போகப் போகின்றன என்ற உளவுத் தகவல் இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்துக்கு 'எப்படியோ' கிடைத்து விடுகிறது! உடனே இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் ஏவுகணைகளுடன் வந்து விடுகின்றன!

இதனால் ஈரான் கொடுக்கும் ஆயுதங்களைப் பாதுகாப்பாக மறைத்து வைக்க ஹெஸ்பொல்லாவுக்கு ஒரு இடம் தேவைப்பட்டது. சமீப காலமாக ஹெஸ்பொல்லா தமக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களை மறைத்து வைத்த இடம், சிரியா நாட்டு ராணுவத்தின் ராணுவக் கிடங்குகள்தான்!

ஈரானியத் தயாரிப்பாக ஃபாட்டா110 ஏவுகணைகள், SA-8 ஏயார் பட்டரிகள் (18 வோர்ஹெட்கள் பொருத்தக்கூடிய ரகம்) தொடக்கம், தரையிலிருந்து வானுக்கு ஏவப்படக்கூடிய ஏவுகணைகள் வரை, சிரிய ராணுவ ஸ்டோரேஜில் இருக்கும் ஹெஸ்பொல்லாவின் ஆயுத லிஸ்ட் மிகப் பெரியது.

அதே நேரத்தில், சிரிய ராணுவத்தின் ஆயுதக் கிடங்குகள் மீது இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்த முடியாமல், ஏவுகணை எதிர்ப்பு, மற்றும் விமான எதிர்ப்பு சாதனங்கள் உள்ளன.

ஈரானில் இருந்து கொண்டுவரப்படும் ஆயுதங்கள், சிரியாவில் உள்ள ஈரானிய ராணுவத் தளத்துக்கே முதலில் கொண்டு செல்லப்படும். அங்கிருந்து, சிரிய ராணுவத்தின் ஆயுதக் கிடங்குகளுக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படும்.

ஆயுதங்கள் இப்படி நகர்வதற்கு முன், ஈரானிய ராணுவத் தளத்தின் ஆயுதக் கிடங்கு மீது தாக்குதல் நடத்தியிருக்கிறது, இஸ்ரேல்!

இதுதான் இந்தத் தாக்குதலின் பின்னாலுள்ள ரகசியம்!

கடந்த சில வாரங்களாக சிரியாவின் ராணுவக் கிடங்குகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஆயுதங்களை வெளியேற்றத் தொடங்கியிருக்கின்றது ஹெஸ்பொல்லா என்கிறது மொசாத். அதுதான் புதிய ஆயுதங்கள் வந்து இறங்குகின்றன.

இந்த ஆயுத இடமாற்றத்தை மிக ரகசியமாகச் செய்வதாக ஹெஸ்பொல்லா நினைத்துக்கொண்டு இருந்தாலும், மொசாத் வட்டாரங்களில் ஆயுத இடமாற்றம் பற்றி விலாவாரியாகத் தகவல்கள் உள்ளன.

இப்போது, ஆயுதங்கள் மீது இஸ்ரேல் குறி வைத்து அடிக்கத் தொடங்கிவிட்டால், ஹெஸ்பொல்லா இயக்கம், 'ஏதாவது வழியில்' மிகத் துரிதமாக ஆயுதங்களை சிரியாவில் இருந்து லெபனான் எல்லையை நோக்கிக் கொண்டுபோக முயற்சிப்பார்கள் என ஊகிக்கலாம்.

அப்படியான முயற்சிகள் தொடங்கினால்... இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் தமது 'வழமையான சோர்ஸ்கள்' மூலம் விஷயத்தைத் தெரிந்துகொண்டு தாக்குதல் நடத்த முயன்றால்...

லெபனான் எல்லையில் வானவேடிக்கை நடந்தால் ஆச்சரியப்படாதீர்கள்.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

**விமான விபத்து புலனாய்வு**




# அதிகாலை நேரத்தில் மலை முகட்டு ரன்வேயில்!

மத்திய கிழக்கு நாடுகளில் ஏராளமான இந்தியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிவதால், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து விமானங்கள் இந்தியாவின் சிறிய விமான நிலையங்களுக்கும் நேரடியாக இயக்கப்படுகின்றன (இந்தியாவின் பெரிய விமான நிலையங்கள் டில்லி, மும்பாய், கல்கத்தா, பங்களூரு, சென்னை, திருவனந்தபுரம்). இந்தியாவின் சிறிய விமான நிலையங்களில் சில சர்வதேச விமானப் பயணங்களுக்குக் 'கொஞ்சம்' ஆபத்தானவை.

அப்படியான சிறிய விமான நிலையம் ஒன்றுக்கு மத்திய கிழக்கில் இருந்து இயக்கப்பட்ட விமானம் விபத்துக்குள்ளானது எப்படி என்பதையே இந்தக் கட்டுரையில் பார்க்கப் போகிறோம். நாம் குறிப்பிடும் 'சிறிய' விமான நிலையம், மங்களூர். இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உள்ளது. (இலங்கையில் இருந்து புட்டப்பர்த்தி சென்றவர்கள், இந்த மங்களூர் நகரின் ஊடாகச் சென்றிருக்கச் சந்தர்ப்பம் அதிகம்)

துபாய் விமான நிலையத்தின் இரண்டாவது டேர்மினலில் இருந்து மங்களூருக்கு அதிகாலை 1:15க்குப் புறப்படும் விமானம் அது. எயார் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமாக (குறைந்தகட்டண சேவை) எயார் இந்தியா எக்ஸ்பிரஸ் பிரிவினால் இயக்கப்படும் போயிங் 737 800 ரக விமானம். தட இலக்கம் IX812.

இது நடைபெற்ற காலப்பகுதியில், வாரத்தில் ஏழு நாளும் இதே நேரத்தில் புறப்பட்டு 3 மணி 45 நிமிடப் பயண நேரத்தின் பின்னர் மங்களூர் விமான நிலையத்தில் காலை 6:30க்கு தரையிறங்கும் இந்த விமானம்.

2010ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி சனிக்கிழமை, மங்களூர் விமான நிலையத்தில், வழமைபோல தரையிறங்கியது. ஆனால், இறங்கிய பின்னர் விமானம் முழுமையாக இல்லை.

மங்களூர் விமான நிலையத்தின் ரன்வே முடியும் இடத்துக்குள் நின்றிருக்க வேண்டிய விமானம், அந்த எல்லைக்குள் நிற்கவில்லை. ரன்வே முடியும் இடத்தையும் கடந்து வெளியே போய் மலைச்சரிவிலிருந்து சரிந்து வீழ்ந்து வெடித்ததில், அதில் பயணம் செய்த 158 பேர் உயிரிழந்தனர். இந்த மோசமான விபத்திலும் அதிர்ஷ்டசாலிகளான எட்டுப் பேர் மட்டும் உயிர் தப்பினர்.

இது அநேகமாக விமானியின் தவறால் ஏற்பட்ட விபத்தாகத்தான் இருக்க வேண்டும் எனத் தொடக்கத்திலேயே ஊகிக்கப்பட்டு விட்டது. ஆனால், மங்களூர் விமான நிலையமும் அதன் ரன்வேயும் அமைந்திருந்த பூகோள அமைப்புப் பற்றியும், அது எவ்வளவு ஆபத்தானது என்பது பற்றியும், எயார் இந்தியா உட்பட யாருமே பெரிதாக வாய் திறக்கவில்லை (எயார் இந்தியா இந்திய அரசுக்குச் சொந்தமான விமான நிறுவனம்).

ஒரு விமான நிலையம் மலை முகட்டில் இருக்கிறது. அதன் ரன்வே முடியும் இடத்தில் மலை முகடு முடிந்து விடுகிறது. கீழே பெரிய பள்ளத்தாக்கு இருக்கிறது. அந்தப் பூகோள அமைப்பு எவ்வளவு ஆபத்தானது என்பதை இந்த விமான விபத்து காட்டியிருக்கிறது.

பொதுவாகவே விமானம் ஒன்று தரையிறங்கும்போது, அது ரன்வேயில் தரையைத் தொட்ட பின்னர் குறிப்பிட்டளவு தொலைவு வரை வந்த வேகத்தில் ஓடிச்சென்று படிப்படியாக வேகம் குறைந்து நிறுத்தப்படுவதைக் கவனித்திருப்பீர்கள். விமானத்தின் வேகத்தைக் குறைத்து முழுமையாக நிறுத்தப்படுவதற்கு குறிப்பிட்டளவு நீளமான ரன்வே தேவை என்பதையும் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

ஒரு விமானிக்கு வழங்கப்படும் தரையிறங்கலுக்கான ஆரம்பப் பயிற்சியே, விமானத்தைத் தரையிறக்கும்போது ரன்வேயில் எந்தப்பகுதியில் தரையைத் தொட வேண்டும் என்பதுதான். அதுவும் ரன்வேயின் நீளத்தின் பத்தில் ஒரு பங்குக்குள் விமானத்தைத் தரையைத் தொடவைத்துவிட வேண்டும். அதாவது, 2,000 மீட்டர் நீளமான ரன்வேயாக இருந்தால், அதன் தொடக்கத்திலிருந்து 200 மீட்டருக்குள் தரையைத் தொடவைத்துவிட வேண்டும்.

இதை Final touchdown என்று சொல்வார்கள்.

குறிப்பிட்ட ரன்வேயில் குறிப்பிட்ட விமானம் தரையிறக்கப்படலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்தால் ரன்வேயின் நீளத்தின் முதல் பத்திலொரு பங்குக்குள் விமானம் தரையைத் தொட்டுவிட்டால் ரன்வேயின் முடிவுக்குள் அந்த விமானத்தின் வேகத்தைக் குறைத்துப் பத்திரமாக நிறுத்திவிடலாம்.

அதிகாலையில் நடைபெற்ற இந்த விபத்தின்போது, எயார் இந்தியா விமானி, விமானத்தைத் தரையில் தொடவைத்தது கிட்டத்தட்ட ரன்வே நீளத்தின் பாதிப்பகுதியில் என்று தெரியவருகின்றது. அப்படித் தரையிறக்கப்பட்ட விமானத்தை மங்களூர் விமான நிலையத்தின் ரன்வேயின் முடிவுக்குள் முழுமையாக நிறுத்திவிட முடியாது.

விமானம் ரன்வேயையும் தாண்டிச்சென்று, பள்ளத்தாக்கில் சரிந்து விழுந்து, இரண்டாக உடைந்து, விபத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

விமானங்கள் தரையிறங்கும்போது ரன்வேயின் தொடக்கத்தில் உள்ள பத்தில் ஒரு பகுதிக்குள் தரையைத் தொடாவிட்டால் கட்டாயம் விபத்துக்கு உள்ளாகுமா?

அப்படிச் சொல்ல முடியாது. அப்படி விபத்துக்குள்ளாக வேண்டுமென்றால் வாரத்துக்கு நாலைந்து விமானங்களாவது விபத்துக்குள்ளாக வேண்டியிருக்கும்.

காரணம், சகல தரையிறக்கல்களிலும் 100 சதவீதம் விமானிகளால் அந்த எல்லைக்குள் விமானத்தைத் தரையிறக்க முடிந்து விடுவதில்லை. சற்று முன்னே பின்னே தரையிறக்கப்படுவது சகஜம்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡






ஆனால், தரையிறக்கப்படும் ரன்வே விமான ரகத்தின் தேவையைவிட மிக நீளமானதாக இருந்தால் சிக்கல் இல்லை.

உதாரணமாக, கனடாவின் டொரன்டோ விமான நிலையத்தை எடுத்துக் கொண்டால் அதன் பிரதான ரன்வே மிகவும் நீளமானது; ஏர்பஸ் 380 ரக விமானங்களும் தரையிறங்கக்கூடிய இந்த ரன்வே 3,389 மீட்டர் நீளமானது. நாம் குறிப்பிடும் எயார் இந்தியாவின் விபத்துக்குள்ளான போயிங் 737 800 ரக விமானம் இந்த ரன்வேயின் தொடக்கப் பத்தில் ஒரு பங்குக்குள் தரையைத் தொட்டால் ரன்வேயின் பாதித் தூரத்துக்கு முன்பே வேகம் குறைக்கப்பட்டு நிறுத்தப்பட்டுவிடும். எனவே, ரன்வேயின் பாதித்தூரத்தில் தரையிறங்கினால் கூட தப்பித்துக்கொள்ளும்.

ஆனால், மங்களூர் விமான நிலையத்தின் ரன்வே மிகக் குறுகியது. ஆரம்பத்தில் இருந்த ரன்வே வெறும் 1,615 மீட்டரே நீளமானது. பின்பு 2006ம் ஆண்டு மற்றொரு ரன்வே அமைக்கப்பட்டது. அதுகூட அவ்வளவு நீளமானதல்ல. 2,450 மீட்டர்கள்தான். இப்படியான குறுகலான ரன்வேயில் தொடக்கப் பத்தில் ஒரு பகுதிக்குள் விமானம் தரையைத் தொடாவிட்டால் ஆபத்துத்தான்.

ரன்வேயின் பாதியில் போய் தரையிறங்கினால் தப்பிக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறது. இதை Aircraft Misapproach என்று சொல்வார்கள். விமானத்தை ரன்வேயில் ஓடவிடாமல் உடனடியாக மேல் ஏற்றிவிட வேண்டும்.

இதுவும் சிவில் ஏவியேஷனில் சகஜமான ஒன்றுதான். ஆனால், இந்திய விமானிகள் இந்த நடைமுறையைப் பின்பற்ற விரும்புவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், அது அவர்களது வேலையில் விடப்பட்ட மிகப்பெரிய தவறாகக் கண்டிப்பாகக் கணிப்பிடப்படும். அதன்பின் விமானிகளுக்குப் பதவி உயர்வுகள் கிடைக்காது என்பது இந்திய நடைமுறை. இதனால்தான், இந்திய விமானங்களைச் செலுத்தும் விமானிகள் Aircraft Misapproach நடந்தாலும் மேலெழாமல், விமானத்தை நிறுத்தப் பார்ப்பார்கள்.

மற்றைய நாடுகளிலும் Aircraft Misapproach என்ற பிழையாக தரையிறக்கல் விமானியின் தவறாகக் கருதப்படும்தான். ஆனாலும், அது பாரதூரமான விஷயமாகக் கருதப்படுவதில்லை.

மங்களூர் விமான விபத்துபற்றி அந்த விமான நிலையத்துக்கு அடிக்கடி விமானங்களைச் செலுத்தும் பெயர் வெளியிட விரும்பாத எயார் இந்தியா விமானி ஒருவரிடம் பேசியபோது, குறிப்பிட்ட அந்த விமான நிலையத்தில் தரையிறங்குவதில் தாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள சிக்கல்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

"மங்களூர் விமான நிலையம் தரையிறங்கல் விஷயத்தில் மிகவும் தந்திரமானது. ரன்வே அமைப்பு மிகவும் குறுகலானது என்பதால் பெரிய விமானங்கள் இதில் தரையிறங்குவதும் ஏறுவதும் சிரமமானது. இதுபற்றி ஏற்கனவே விமான நிலைய ஆணையகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

மிகக் குறுகலான ரன்வே என்பதுடன் இது ஒரு மலைக்குமேல் தரை சமதளமாக்கப்பட்டு அமைக்கப்பட்ட ரன்வே. இந்த வகை ரன்வேக்களை table top runway என்று சொல்வார்கள். அதாவது, ஒரு மேசைமேல் அமைக்கப்பட்ட ரன்வே போல அதன் முடிவுடன் தரை முடிந்து போகும். அதையடுத்துப் பள்ளம்தான்.

மங்களூர் ரன்வேயின் முடிவில் இருந்து வெறும் 500 மீட்டர் தொலைவில் மலை முடிவடைந்துவிட, அதையடுத்துப் பள்ளத்தாக்குத்தான். அதாவது, ரன்வே முடிந்த பின்னர் வெறும் 500 மீட்டர் தொலைவுக்கு விமானம் ஓடினால் கூட பள்ளத்துக்குள் விழ வேண்டும். பள்ளமென்றால் கடல் மட்டத்திலிருந்து 300 அடி உயரத்திலிருந்து 30 அடிக்குச் சடுதியாகக் குறையும் பள்ளத்தாக்கு.

இந்தியாவிலேயே மங்களூரை விட வேறு இரு விமான நிலையங்களில்தான் இப்படியான அமைப்பு இருக்கிறது. ஒன்று கேரளாவின் கோழிக்கோடு (ஆங்கிலத்தில் Calicut), மற்றையது மிசோரம் மாநிலத்தின் லெங்பூரி.

மிகக்குறுகலான ரன்வே என்பதால் விமானிகள் இந்த ஓடுபாதைக்குப் பைனல் அப்ரோச்சுக்காக விமானத்தைக் கீழே கொண்டுவரும்போது ஓடுபாதையைச் சரியாகக் கணித்து இறக்க வேண்டும். அப்படிக் கணிக்காமல் இறக்கிவிட்டால் ரன்வேயின் முடிவுக்கு வரும் முன்னர் உடனடியாக மேல் ஏற்ற வேண்டும். அதன் பின்னர் வானில் ஒரு தடவை வட்டமடித்த பின்னரே மறுபடியும் விமானக் கட்டுப்பாட்டு அறையின் அனுமதிபெற்று மீண்டும் கீழே இறக்க வேண்டும்.

இப்படிச் செய்யும்போது இரு சிக்கல்கள் உள்ளன.

முதலாவது, அதற்கு ரன்வே சமதளத்தில் இருக்க வேண்டும். மங்களூரில் ரன்வே கிட்டத்தட்ட சமதளமானது என்றாலும் முற்றிலும் சமதளத்தில் இல்லை. அந்த ரன்வேயியில் விமானம் ஓடும்போது விமானத்தின் கொக்பிட்டில் உள்ள உயரம் காட்டும் கருவியைக் கவனித்துப் பார்த்தால், தரையின் உயரம் கடல்மட்டத்திலிருந்து 300 அடியிலிருந்து 272 அடிவரை கூடிக் குறைவது தெரியும். அதாவது, இந்த ரன்வே 100 சதவீதம் சமாந்திரமாக இல்லை. இது ஒரு சிக்கல்.

அடுத்த சிக்கல், எப்படியான ரன்வேயாக இருந்தாலும் ஒருமுறை தவறாகத் தரையிறக்கிவிட்டு உடனே விமானத்தை மேலே ஏற்றினால், அந்த விமானி இந்திய சிவில் விமான ஆணையகத்தால் கருப்புப் புள்ளி குத்தப்பட்டு விடுகிறார். கருப்புப்புள்ளி குத்தப் படுவது நீண்ட விசாரணை ஒன்றுக்குள் விமானியைத் தள்ளிவிடுவதுடன், சில சமயங்களில் பதவியிறக்கவும் வைத்துவிடும்.

இதனாலேயே ரன்வேயில் தவறாகத் தரையிறங்கிவிட்டாலும் விமானத்தை உடனே மேலே ஏற்றாமல் முடிந்தவரை அந்த ரன்வேக்குள் நிறுத்திவிட இந்திய விமானிகள் முயல்வது வழக்கம்" என்று தமது தரப்பை விளக்கினார் அந்த எயார் இந்தியா விமானி.

விபத்துக்குள்ளான எயார் இந்தியா விமானத்தைச் செலுத்திய விமானி, ஒரு இந்திய விமானி அல்ல. Zlatko Glusica என்ற பெயருடைய அந்த விமானி சேர்பியாவில் பிறந்த ஒரு பிரிட்டிஷ் பிரஜை. வயது 53. எயார் இந்தியாவின் கன்ட்ராக்டில் வேலை செய்த அவர், மங்களூரில்தான் வசித்து வந்தார். ஏற்கனவே, இந்த விமான நிலையத்தில் இந்த ரக விமானத்தைப் பல தடவைகள் இறக்கியிருக்கிறார். அதாவது 737 800 ரக விமானத்துடன் நல்ல பரிச்சயமுடையவர்.

எயார் இந்தியா விமானியாக ஒப்பந்தம் செய்யப்படும் முன், சேர்பியா நாட்டு விமான நிறுவனமான ஜாட் எயார்வேய்ஸில் (Jat Airways) பணிபுரிந்திருக்கிறார். இதற்குமுன் 10,000 மணி நேரத்துக்குமேல் பறந்த அனுபவமுடைய இவர், அதில், 7,500 மணி நேரம் பிரதான விமானியாக (கப்டன்) இருந்தவர்.

விபத்துக்குள்ளான தினத்தன்று விமானம் ரன்வேயில் சற்று அதிக தொலைவிலேயே தரையைத் தொட்டுவிட, விமானி தனது தவறை உணர்ந்துகொண்டு, விமானத்தை மேலே ஏற்ற முயன்றிருக்கிறார் என்றே

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

தெரிகிறது. ஆனால், விமானத்தால் ரன்வே முடிவதற்குள் மேல் எழ முடியாமல் போகவே, ரன்வேயையும் கடந்து சென்று பள்ளத்தாக்கினுள் வீழ்ந்து வெடித்திருக்கிறது.

விமானத்தை உடனடியாக மேலே எழவைத்திருந்தால் விமானியின் வேலையில் சிக்கல் வந்தாலும் விபத்துத் தவிர்க்கப்பட்டிருக்கும். அவரும் உயிர் தப்பியிருப்பார்.

ஆனால், ஏன் விமானம் மேல் எழ முடியவில்லை. அதற்கும் வேறு ஒரு காரணம் இருக்கலாம்.

ஒருமுறை கீழ் இறக்க முயன்று சரியான பொசிஷன் இல்லாது மேலே ஏற்ற வேண்டுமென்றால், விமானத்தின் அதிகபட்ச மேல் எழும் நிறை அதாவது, Maximum Takeoff Weight (MTOW) சரியாகக் கணிப்பிடப்பட்டு அப்படியே விமானம் லோட் செய்யப்பட்டிருக்க வேண்டும். சாதாரண நடைமுறையில் இது எப்போதும் சரியாக நடப்பதில்லை. சில சமயங்களில் விமான நிறுவனத்தின் லோட் பிளானிங் அலுவலகம், Maximum Takeoff Weightஐ விட அதிக நிறையை பிளான் பண்ணுவது சகஜம்.

முக்கியமாக பயணிகள் நிறைந்த விமானம் மற்றும் பயணிகள் அதிக நிறையுடைய சூட்கேஸ்களை எடுத்துவரும் ரூட்களில் புறப்படும் விமான நிலையத்தின் ரன்வே மிக நீளமாக இருந்தால் இந்த அட்ஜஸ்ட்மென்டை லோட் பிளானிங் அலுவலகம் செய்வதுண்டு. விமானிகளுக்கும் தெரிந்து, அவர்களது அனுமதி பெற்றே இதைச் செய்வது வழக்கம்.

நாம் குறிப்பிடும் விபத்துக்குள்ளான விமானத்தில் இதற்கும் சாத்தியம் உண்டு.

எப்படி என்றால் விமானம் துபாய் விமான நிலையத்திலிருந்து கிளம்பியது. மத்திய கிழக்கில் உள்ள மிகப்பெரிய விமான நிலையம் அது. நீளமான ரன்வேயைக் கொண்டது. இந்த விமான நிலையத்தில் Maximum Takeoff Weightஐ விட அதிக நிறை லோட்பிளானில் பிளான் பண்ணப்பட்டிருந்தால் விமானிகள் மறுப்புச் சொல்லப் போவதில்லை. காரணம், நீளமான ரன்வேயில் கொஞ்சம் அதிக தூரம் ஓடி விமானத்தை மேலே ஏற்றிவிடலாம்.

அடுத்து, விமானத்தில் 160 பயணிகள் இருந்திருக்கின்றனர். இது இந்த வகை விமானங்களில் கிட்டத்தட்ட 90% load factor. அதாவது விமானத்தில் மொத்த சீட்களில் 90 சதவீத சீட்களில் பயணிகள் இருந்தனர். அத்துடன், துபாயில் இருந்து இந்தியா செல்லும் பயணிகளின் சூட்கேஸ்கள் வழமையான நிறையைவிட அதிக நிறையுடையவை. அதற்கான மேலதிக கட்டணத்தைப் பயணி கட்டத் தயார் என்றால், ஏற்றிச்செல்ல விமான நிறுவனமும் தயாராகவே இருக்கும்.

அதுவும் ஏயார் இந்தியா என்றால் கேட்கவே வேண்டாம். ஆனந்தமாகத் துள்ளித் துள்ளி ஏற்றிச் செல்லும்.

இதனால், விமானம் துபாயை விட்டுக் கிளம்பும்போதே அதன் அதிகபட்ச மேல் எழு நிறையைவிட, அதிக நிறை பிளான் பண்ணப்பட்டிருப்பது சாத்தியமே. விமானம் தரையிறங்கும்போது அதிகபட்ச லான்டிங் நிறைதான் (maximum landiang weight) கணிப்பிடப்படும். அந்த நிறை எப்படிக் கிடைக்கிறது என்றால், விமானம் ஏறும்போதுள்ள நிறையிலிருந்து அந்த மூன்று மணி நேரப் பயணத்தின்போது பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் நிறையைக் கழிக்க வேண்டும்.

இதனால், மேலே ஏறும்போது இருக்க வேண்டிய Maximum Takeoff Weightஐ விட அதிக நிறையில் விமானம் இருந்தாலும், தரையிறங்கும்போது இருக்கவேண்டிய அதிகபட்ச நிறையைவிடக் குறைவான நிறைக்கு விமானம் வந்துவிடும் என்பதால் விமானிகள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. துபாயில் ரன்வே நீளம் அதிகமாக இருப்பதால் ஓகே பண்ணிவிடுவார்கள்.

சிங்கிள் செக்டர் ரூட் என்பதால், இரண்டாவது டேக்ஓஃப் தேவைப்படாது என்ற அலட்சியமே இதற்குக் காரணம். இது 99.99% பிசகாது. எப்போதாவது பிசகினால் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

ஒருவேளை விபத்துக்குள்ளான ஏயார் இந்தியா விமானத்தின் துபாயில் உள்ள லோட்பிளான் அலுவலகம் இந்த விமானத்தின் Weight and Balanceல் இப்படியொரு அட்ஜஸ்ட்மென்டைச் செய்து, விமானியும் புரிந்துணர்வு அடிப்படையில் அதற்கு ஒப்புதல் கொடுத்திருந்தால்...

மங்களூர் விமான நிலையத்தில் ரன்வேயில் இறங்க முயன்றுவிட்டு உடனே மேலே எழ முயன்றால்...

இந்த நிறை Instant Elevationக்கு அதிகமானது. லேசில் மேலெழ முடியாது. அதிக தூரம் தரைக்குச் சமாந்திரமாக ஓடிச்சென்ற பின்னரே மேலே எழ முடியும். அப்படியானதொரு சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து நடைபெற்றும் இருக்கலாம்.

இந்த விபத்து 5 மாத விசாரணையின்பின் விமானியின் தவறால் ஏற்பட்ட விபத்து என்ற ஒற்றைக் காரணத்துடன் கேஸ் முடிக்கப்பட்டு விட்டது. விமானியே இறந்து விட்டார். அவர் ஒரு இந்தியப் பிரஜையே இல்லை என்பதால், யாரும் மேல் முறையீடு செய்யவில்லை.

விமானியின் தவறும் இதில் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் விமானியின் தவறைவிட இந்த விபத்துக்கு மேலே குறிப்பிட்டதுபோல வேறு காரணிகளும் இருக்கலாமா என்பதுபற்றி இந்த விசாரணையில் யாரும் வாய் திறக்கவில்லை. முக்கியமாக போயிங் 737 800 ரக விமானத்தை இப்படிச் சிக்கலான விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதிப்பது எந்தளவுக்குப் பத்திரமானது என்று யாரும் கேள்வி எழுப்பவில்லை?

அதைவிட முக்கியம், அரசு அனுமதித்தாலும் ஆபத்தான விமான நிலையங்களில் தரையிறங்க முடியாது என விமான நிறுவனங்கள் கூறி விடுவது வழக்கம். அதை ஏன் ஏயார் இந்தியா செய்யவில்லை?

இப்படியான கேள்விகள் எழுந்தால், இந்திய அரசுக்குச் சொந்தமான விமான நிறுவனத்தின் நம்பகத் தன்மை அடிபட்டுப் போய்விடும் என்பதே காரணமாக இருக்கலாம்.




படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!



# புலிகள் மீது தாக்குதல் நடத்த இந்தியா 'தந்திரமாகப்' பெற்றுக் கொடுத்த இலவச ஆயுதங்கள்!


ஒரு 'பெரிய நாட்டினுடைய' உளவுத்துறை கொடுத்த உளவுத்தகவலை அடுத்து, இலங்கை அரசு, நாம் குறிப்பிட்ட 'பெரிய நாட்டிடம்' புலிகளின் விமானப் பிரிவான வான் புலிகளைச் சமாளிக்க ராணுவ உதவி கேட்டதையும், அந்தப் 'பெரிய நாடு' நேரடியாக ராணுவ உதவி செய்யாமல் இலங்கை அரசை செக் குடியரசின் பக்கமாகக் கையைக் காட்டி விட்டதையும் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். இதற்கிடையே இப்படியொரு விவகாரம் நடப்பதைத் தெரிந்துகொண்ட இந்திய உளவுத்துறை 'றோ', தாமும் இதில் தலையை விட்டது குறித்தும் கடந்த அத்தியாயத்தில் எழுதியிருந்தோம்.

இலங்கை அரசு, செக் குடியரசிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை (AA Missiles) மட்டுமே முதலில் கோரியிருந்தது. அவற்றை துரிதப்படுத்தி வழங்குமாறு கேட்டு மூன்று பேர் அடங்கிய குழு ஒன்றை செக் குடியரசுக்கு இலங்கை அரசு அனுப்பி வைத்தது. இந்த மூன்று பேரில் இருவர் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்தவர்கள். மூன்றாவது நபர் இலங்கை விமானப்படையைச் சேர்ந்தவர்.

விமானங்களோடு தொடர்புடைய ஆயுதங்கள் இவையென்றாலும், இவற்றை உபயோகிக்கப் போவது விமானப் படையின் ஆட்களல்ல, தரைப்படையின் ஆட்களே. காரணம் இவை விமானத்திலிருந்து விமானங்களுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் (Air-to-Air missiles) அல்ல.

இலங்கை விமானப்படையின் போர் விமானங்களை வைத்து, வான் புலிகளின் விமானங்களை வானில் தாக்குவது முடியாது என அதற்குள் இலங்கை பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருந்தது. காரணம், சூப்பர்சோனிக் வேகத்தில் செலுத்தப்படக்கூடிய போர் விமானங்களை, அதி மட்டுப்படுத்தப்பட்ட வேகத்தில் செலுத்துவது விமானத்தை ஸ்ட்ரோல் பண்ண வைத்துவிடும்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



இதனால், இலங்கை வான்படையிடம் இருந்த மிக் போன்ற விமானங்களை வைத்து வான்புலிகளின் வேகம் குறைந்த இலகு விமானங்களைத் தாக்கும் திட்டத்தை விமானப்படை எப்போதோ கைவிட்டு விட்டிருந்தது. அதனால்தான் தரையிலிருந்து தாக்கும் முயற்சிகளில் தீவிரம் காட்டப்பட்டு, செக் குடியரசிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்க ஆட்களை அனுப்பியது இலங்கை அரசு. ஆனால், அந்தக் குழுவில் ஒருவர் ஏன் விமானப்படையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், இலங்கை அரசுடன் தொடர்பில் இருந்த 'பெரிய நாட்டு' உளவுத் துறை, மற்றொரு தகவலை இலங்கைக்கு கொடுத்தது. அது கிட்டத்தட்ட ஒரு யுத்த திட்டமிடல் ஐடியா.

"விமான எதிர்ப்பு ஏவுகணைகளை நீங்கள் வேறு இடங்களில் பெற்றுக் கொள் ளலாம். செக் குடியரசிடம் இருந்து MBRL (Multi Barrel Rocket Launcher) எனப் படும் பல்குழல் ராக்கெட் லோஞ்சர்களை பெறுவதற்கான பேச்சுக்களை நடத்தவும். அவற்றை இலவசமாகவே அவர்களிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு ஒரு வழி உள்ளது" என இலங்கை அரசுக்கு ஐடியா கொடுத்தது, அந்த வெளிநாட்டு உளவுத்துறை.

வன்னியில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலுக்கு இவ்வகை MBRLகள் மிக உபயோகமானவை. இந்த MBRLகளை செக் குடியரசிடம் இருந்து பெற்று, புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கை ராணுவம் பயன்படுத்தியது பற்றி, இந்த தொடரில் மேலோட்டமாக எழுதியிருந்தோம் அல்லவா? இதுதான், அந்த விவகாரம். இப்போது சற்று விளக்கமாக பார்க்கலாம்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பெறுவதற்காக மூன்று பேர் அடங்கிய குழு ஒன்றை செக் குடியரசுக்கு இலங்கை அரசு அனுப்பி வைத்த பின்னரே, வெளி நாட்டு உளவுத்துறை MBRLகளை செக் குடியரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் என ஐடியா கொடுத்தது. இதையடுத்து, பாதுகாப்பு துறையைச் சேர்ந்த அந்த மூன்று பேரையும் திருப்பி அழைத்துக்கொண்ட இலங்கை அரசு, இந்த விவகா ரத்தை ராஜதந்திர மட்டத்தில் டீல் பண்ணியது.

புதிதாக பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள், பாதுகாப்பு துறையைச் சேர்ந்த ஆட்கள் அல்ல, வெளியுறவுத் துறையை சேர்ந்தவர்கள். இந்தக் குழுவுடன், ஐ.நா.வுக்கான இலங்கை தூதரக அலுவலகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவரும் அனுப்பி வைக்கப்பட்டார், குறிப்பிட்ட அந்த அதிகாரியை அனுப்பி வைக்கச் சொன்னதே, நாம் குறிப்பிடும் 'பெரிய நாட்டு' உளவுத்துறைதான்.

ஆயுதம் வாங்குவதற்கும், ஐ.நா.வுக்கான இலங்கை தூதரக அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிக்கும் என்ன கனெக்ஷன்? இதில்தான் உள்ளது விஷயம்.

இது ஒரு பெரிய ராஜதந்திர விளையாட்டு. பெரிய கைகள் தொடர்புடையை விளை யாட்டு. அதற்கான சிறந்த உதாரணங்களில் ஒன்று, இலங்கை ராணுவத்துக்கு MBRLகள் இலவசமாக கிடைத்த விவகாரம்.

இலங்கைக்கு MBRLகள் இலவசமாகக் கிடைத்த ராஜதந்திர விளையாட்டு முன்பு ஒரு தடவையும் நடந்தது. அது, 2001ம் ஆண்டு நடந்தது. அப்போதும், இலங்கை ராணுவத்துக்கு MBRLகள் இலவசமாகவே கிடைத்தன. அவற்றை வைத்தே, தம்வசம் இருந்த யாழ்ப்பாணத்தை காப்பாற்றிக் கொண்டது இலங்கை ராணுவம்.

மீண்டும் இறுதி யுத்தம் நடந்த நாட்களில் இலங்கை ராணுவத்துக்கு MBRLகள் இலவசமாக கிடைத்தன. அதை வைத்துத்தான், இறுதி யுத்தத்தில் வெற்றி பெற் றது இலங்கை ராணுவம்.

இறுதி யுத்தத்துக்காக இலவசமாகக் கிடைத்தது எப்படி என்பதைப் பார்க்குமுன், முதல் தடவை எப்படி இலவசமாகக் கிடைத்தது என்பதையும் பார்த்து விடலாம்.

1995ம் ஆண்டு, அக்டோபர் 17ம் திகதி, இலங்கை ராணுவம் 'ஆபரேஷன் ரிவி ரெஸ' ராணுவ நடவடிக்கையை தொடங்கியது. புலிகளிடம் இருந்து யாழ்ப்பா ணத்தை கைப்பற்றும் ஆபரேஷன் அது. அந்த ஆபரேஷன் முடிவில் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது. இழந்த யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவதற்காக புலிகள் 2000ம் ஆண்டு தாக்குதலைத் தொடங்கினர். வன்னியில் இருந்து வடக்கு நோக்கி சென்ற புலிகள் ஆனையிறவு தளத்தை கைப்பற்றினர். அங்கிருந்து யாழ்ப்பா ணத்தை நோக்கி முன்னேறத் தொடங்கினர்.

புலிகள் 152mm ஆட்டிலரிகளை அப்போது உபயோகிக்கத் தொடங்கினார்கள். இவை ராணுவத்தின் எறிகணை சூட்டு வீச்சை விட வலிமையாக இருக்கவே, ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த 32,000 ராணுவத்தினரின் பாதுகாப்பு கேள் விக்குறியானது. நிலையில் இலங்கை அரசு, எதிர்ப்பு ஆயுத உதவி செய்யுமாறு முதலாவதாகக் கோரிய நாடு இந்தியா.

இந்தியா எதிர்ப்பு ஆயுத உதவி செய்யவில்லை. மாறாக, 32,000 ராணு வத்தி னரையும் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியேற்ற போக்குவரத்து உதவி செய்ய முன் வந்தது. அதாவது, யாழ்ப்பாணத்தை புலிகள் கைப்பற்றட்டும். உங்கள் ராணு வத்தினரை யாழ்ப்பாணத்தில் இருந்து எமது கப்பல்களில் ஏற்றி, கொழும்பில் இறக்கி விடுகிறோம் என்றது டில்லி.

இலங்கை அரசு, அந்த ஏற்பாட்டை விரும்பவில்லை. எனவே அடுத்து அவர்கள் ஆயுத உதவி கேட்டு போன நாடு சீனா.

இதை டில்லி விரும்பவில்லை. இந்திய மத்திய அரசின் ராஜதந்திர ஆட்டம் தொடங்கியது. இந்திய அரசின் பிரதிநிதி ஒருவர் டில்லியில் இருந்து, கொழும்பு வந்து இறங்கினார்.

இலங்கை ஜனாதிபதியை சந்தித்த டில்லி பிரதிநிதி (தற்போதும் இவர் அரசியலில் உள்ளார்), "உங்களுக்கு (இலங்கை அரசுக்கு) நேரடியாக எம்மால் ஆயுதங்கள் வழங்க முடியாது. தமிழகத்தில் கடும் எதிர்ப்பு உள்ளது. ஆனால், வேறு ஒரு வழியில் ஆயுதம் தர முடியும். அதை ஏற்பாடு செய்து தருகிறோம்.

இதெல்லாம் எப்படி வருகிறது என்று கேட்கக்கூடாது. ஆயுதங்கள் கொழும்புவரை வந்து சேரும்" என்று கூறி, விசித்திரமான ஆயுத சப்ளைப் பாதை ஒன்றில் ஆயுதங்களைப் பெற்றுக் கொடுத்தார். அதுதான், முதல் தடவை இலங்கை



ராணுவத்துக்கு MBRLகள் இலவசமாக கிடைத்த கதை. அவையும் செக் குடியரசு ஆயுதங்கள்தான். அவற்றை டில்லி எப்படி எடுத்துக் கொடுத்தது?

"வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு உடைத்த கதை" என்று சொல்லுவார்கள் அல்லவா? இந்த விவகாரமும், கிட்டத்தட்ட அந்தக் கதைதான்!

இது நடந்த காலத்தில் இந்தியா, செக் குடியரசுடன் ராணுவ தொடர்புகளை வைத் திருந்தது. இந்தியக் கடற்படைக் கப்பல்களின் உதிரிப் பாகங்கள் சிலவற்றை ரஷ் யாவால் உரிய நேரத்தில் கொடுக்க முடியவில்லை. அதே பாகங்கள் செக் குடிய ரசிடம் எதுவித பயன்பாடும் இல்லாமல் இருப்பதாக தெரிவித்த ரஷ்யா, அவற்றை அங்கிருந்து பெற்றுக் கொள்ளும்படி இந்திய பாதுகாப்பு அமைச்சகத்துக்குத் தெரிவித்திருந்தது. அப்படித்தான், இந்த ராணுவத் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

2000த்தின் ஆரம்பத்தில் செக். குடியரசு நேட்டோவில் இணைந்து கொண்டது. அப்போது நேட்டோவால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று, செக் குடியரசின் ராணுவத்திடம் இருந்த MBRLகளை அகற்றி விட வேண்டும் என்பது.

இந்த நிபந்தனைக்காக அவர்கள் MBRLகளை அழித்து விடலாம் அல்லது நட்பு நாடு ஒன்றுக்கு கொடுத்து விடலாம். இந்த விவகாரத்தை செக் குடியரசு இந்தி யாவிடம் தெரிவித்திருந்தது. காரணம், ஆயுதங்களை அழிக்க அவர்கள் விரும்ப வில்லை. இந்தியாவுக்கும் அந்த ஆயுதங்கள் தேவைப்படவில்லை.

இலங்கைக்கு இந்த ஆயுதங்களைத்தான் 'ஏற்பாடு' செய்து கொடுத்தது புதுடில்லி.

செக். குடியரசின் ராணுவ ஜெனரல் ஒருவரை சீருடை அணியாமல் பலாலியி லுள்ள ராணுவத் தளத்துக்கு அழைத்துச் சென்றார், கொழும்பில் இருந்த இந்தி யத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி.

இது நடைபெற்ற நாட்களில் இலங்கை ராணுவம் ஒரு நாளைக்கு 200 ராணு வத்தினர் என்ற வீதத்தில் உயிரிழப்புக்களை சந்தித்துக் கொண்டிருந்தது. ராணுவத் தினரின் மன உறுதி சுத்தமாக இழக்கப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நாடு திரும்பிய செக் குடியரசு ராணுவ ஜெனரல், தமது ராணுவத்திடம் இருந்த MBRLகளை இலங்கைக்கு இலவசமாக கொடுத்து விடலாம் என பரிந்துரை செய்தார். MBRLகளை இலங்கை வரை கொண்டு வர வேண்டுமல்லவா? அதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க முன்வந்தது இந்தியா.

MBRLகளை இலங்கைக்குக் கொண்டுவர இந்தியா செய்த 'விசித்திர போக்கு வரத்து' ஏற்பாட்டையும், அதன்போது நடந்த சில உளவுத்துறை விளையாட்டுக ளையும் அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்... (தொடரும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# பாகிஸ்தானில் சி.ஐ.ஏ.க்கு ஒரு ரகசிய முகாம்!

## ரகசியமான இந்த விவகாரம் எப்படி வெளியே தெரியவந்தது? வானிலிருந்து எடுத்த கூகிள் ஏர்த் படத்தை டைம்ஸ் வெளியிட்டது!

தீவிரவாத இயக்க முக்கியஸ்தர்கள் மீது பாகிஸ்தானில் நடாத்தப்படும் உளவு விமான ஏவுகணைத் தாக்குதல்களை சி.ஐ.ஏ.தான் திட்டமிடுகின்றது என்பது ஒன்றும் பரம ரகசியமல்ல. ஆனால், ரகசியம் எதுவென்றால், பாகிஸ்தானில் நடாத்தப்படும் தாக்குதல்களை சி.ஐ.ஏ. எங்கிருந்து நடாத்துகின்றது என்பதுதான்.

இந்த ரகசியம் இப்போது உடைகிறது. சி.ஐ.ஏ.யின் ஆட்கள் பாகிஸ்தானுக்கு உள்ளே இருந்துகொண்டே உளவு விமான ஏவுகணைத் தாக்குதல்களை நடாத்தியிருக்கிறார்கள் என்பதுதான் ரகசியம்! சரியாகச் சொல்லப்போனால் பாகிஸ்தானில் ஷாம்சி என்ற இடத்திலுள்ள விமானப்படை முகாமிலிருந்துதான் உளவு விமான ஏவுகணைத் தாக்குதல்களை சி.ஐ.ஏ. நடாத்தியிருக்கிறது.

ஷாம்சி என்பது ஒரு சிறிய ஊர். பாலுசிஸ்தானின் குவேட்டா நகரிலிருந்து 350 கி.மீ. தென்மேற்கில் இருக்கிறது.

குண்டுவீச்சுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆளில்லா உளவு விமானங்களில் அனேகமானவை இந்த விமானத் தளத்திலிருந்துதான் புறப்பட்டுச் சென்று குண்டு வீசியிருக்கின்றன. (சில விமானங்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் பறந்து வந்தும் குண்டுவீசிவிட்டுத் திரும்பியிருக்கின்றன)

மற்றயவர்களுக்குத்தான் இந்த விஷயம் ரகசியம். ஆனால், பாகிஸ்தான் அரசுக்குத் தெரிந்தே இது நடைபெற்று வந்தது. சி.ஐ.ஏ.க்கு ஷாம்சி விமானப்படைத் தளத்தில் இந்த வசதியைச் செய்து கொடுத்ததே பாகிஸ்தான் அரசுதான்!

இந்த விஷயம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததன் காரணம் என்ன? பாகிஸ்தான் மக்களுக்கு இந்த விஷயம் வெளிப்படையாகத் தெரியவந்தால், நாளைக்கே அரசுக்கு எதிரான போராட்டமாக மாறிவிடலாம் என்ற பயம்தான்.

யோசித்துப் பாருங்கள். பாகிஸ்தானுக்கு உள்ளேயிருந்தே விமானங்கள் புறப்படுகின்றன. பாகிஸ்தானுக்கு உள்ளேயுள்ள இலக்குகளில் குண்டு வீசுகின்றன. இதில் தீவிரவாத இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் குறி வைத்துக் கொல்லப்படுவது உண்மைதான். ஆனால் அதேநேரத்தில், அப்பகுதியிலுள்ள பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

குண்டுவீசிப் பொதுமக்களைக் கொன்றபின் விமானங்கள் பத்திரமாக பாகிஸ்தானுக்கு உள்ளேயுள்ள தளத்துக்கே திரும்புகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக விமானங்களை இயக்குவது அமெரிக்கா! இவ்வளவு விஷயங்களும் பாகிஸ்தான் மக்களுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டவை. இந்த விஷயங்கள் எல்லாம் வெளிப்படையாகத் தெரியவந்தால், பாகிஸ்தானில் மக்கள் சும்மா இருப்பார்களா? அதுதான் இந்த விஷயம் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது!

பாகிஸ்தான் அரசைப் பொறுத்தவரை, அமெரிக்க உளவு விமானங்கள் 'எங்கிருந்தோ' வந்து பாகிஸ்தானில் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவிட்டுச் செல்கின்றன என்பதையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறது. அதற்காக பாகிஸ்தான் சுட்டிக்காட்டும் ஒரு விஷயம், பாகிஸ்தானில் மறைந்து வாழ்ந்த பின் லாடனைக் கொல்ல அமெரிக்க அதிரடிப்படையினர் ஹெலிகொப்டரில் வந்த விவகாரம்தான்.

அந்த 'பின் லாடன் ஆபரேஷன்' முன்கூட்டியே பாகிஸ்தானுக்குச் சொல்லப்பட்டிருக்கவில்லை என்பது உண்மைதான். முன்கூட்டியே சொல்லப்பட்டிருந்தால், பின் லாடனை எச்சரித்திருக்கும் பாகிஸ்தானின் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ. அல்லது, பின் லாடனை அங்கிருந்து அகற்றினாலும் அகற்றியிருப்பார்கள்.

இதனால்தான் பின் லாடன் விஷயத்தில் சி.ஐ.ஏ. ரகசியம் காத்தது.

ஆனால், பாகிஸ்தானுக்கு உள்ளே ஷாம்சி என்ற சிறிய ஊரில் உள்ள முகாம் ஒன்றில் இருந்து சி.ஐ.ஏ. இயங்குவது என்பது, பாகிஸ்தான் அரசுக்குத் தெரியாமல் நடந்திருக்கவே முடியாது!

சரி. ரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த ஷாம்சி முகாம் விவகாரம் எப்படி வெளியே தெரியவந்தது?

சி.ஐ.ஏ.க்கும் பாகிஸ்தானிய உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.க்கும் இடையே ஏற்பட்டுள்ள சமீபகால முறுகலின் காரணமாகவே ரகசியம் வெளியாகியிருக்கிறது என்று உளவு வட்டாரங்களில் கூறுகிறார்கள்.

பாகிஸ்தானிய உளவுத்துறை, தமது எல்லைக்குள் இருந்து சி.ஐ.ஏ. இயங்குவது பற்றிய தனது அதிருப்தியை பாகிஸ்தான் அரசுக்குத் தெரிவித்தது. அதையடுத்து பாகிஸ்தான் அரசு வாஷிங்டனுக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்பியது. "சி.ஐ.ஏ. தமது தளத்தை ஷாம்சி விமானப்படை முகாமிலிருந்து அகற்ற வேண்டும்" என்பதே பாகிஸ்தான் அரசு அனுப்பிய வேண்டுகோள்.

பாகிஸ்தானின் வேண்டுகோள் வாஷிங்டன் செல்லும்வரை எல்லாமே ரகசியமாகத்தான் இருந்தன. வாஷிங்டனில் விஷயம் சி.ஐ.ஏ.க்குச் சொல்லப்பட்டது. சி.ஐ.ஏ. இதைக் கேட்டுவிட்டுச் சும்மா இருக்குமா? அதுதான் ரகசியத்தை வெளியே கசியவிட்டுவிட்டது என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். இது அநேகமாக உண்மையாகவே இருக்கலாம். அதை எப்படிச் சொல்கிறோமென்றால், இந்தக் கதை வெளியாகியிருப்பது பாகிஸ்தானில் அல்ல... அமெரிக்காவில்!

ரகசியம் வெளியாகிவிட்டதால், இப்போது சங்கடம் பாகிஸ்தானுக்கு!

பாகிஸ்தானுக்குள் இருந்து இயங்க சி.ஐ.ஏ.யை அனுமதித்தது ஏன் என்று கேள்வி கேட்டுக் குடையப்போகும் எதிர்க் கட்சிகளையும் சமாளிக்க வேண்டும். மக்களையும் சமாளிக்க வேண்டும்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



சர்வதேச புலனாய்வு

பாகிஸ்தானுக்குள் வைத்து சி.ஐ.ஏ. இதுவரை காலமும் நடாத்திக் கொண்டிருந்த இந்த ரகசியத் தளம் பற்றிக் கடந்த காலத்தில் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அப்போதெல்லாம் பாகிஸ்தான் அரசு அப்படி எதுவும் அங்கே நடைபெறவில்லை என்றே கூறிவந்திருந்தது.

ஷாம்சியில் அமைந்துள்ள இந்த விமானத்தளம் பரவலாக அறியப்பட்டதல்ல. ஆப்கானிஸ்தான் யுத்தத்துக்கு முந்திய காலங்களில் சவுதிப் பணக்காரர்கள் பறவை வேட்டைக்காக பாகிஸ்தான் வரும்போது பயன்படுத்திய விமானத்தளம் இது. அதாவது தனியார் விமானங்கள் வந்துபோகும் ஒதுக்குப்புறமான, சிறிய விமானத் தளம். (அந்த நாட்களில் பண்டாரி விமானத் தளம் என்றே அறியப்பட்டிருந்தது)

ஷாம்சி விமானத் தளம்



ஆப்கானிஸ்தான் யுத்தம் தொடங்கி அமெரிக்கப் படைகள் ஆப்கானுக்குள் பிரவே சித்தபோது, அமெரிக்க ராணுவத்துக்கு படைத்தளங்கள் அமைக்க இடங்கள் தேவைப்பட்டன. ஆப்கானுக்குள் எல்லாமே அவர்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால், விரும்பிய இடங்களில் ராணுவத் தளங்களை அமைத்துக் கொண்டனர்.

ஆனால் ஆப்கானுக்குள் அமைக்கப்பட்ட அமெரிக்க ராணுவத் தளங்கள் தலிபான்களின் சுலபமான இலக்குகளாக இருந்தன.

அப்போதுதான் ஆப்கானுக்கு வெளியேயும் ராணுவத் தளங்கள் அமைக்கும் திட்டத்தைப் பரிசீலனை செய்தது அமெரிக்க ராணுவம்.

வெளியே அமைக்கப்படும் தளங்கள் ஆப்கான் எல்லைக்கு அருகாமையிலும் இருக்க வேண்டும். அங்கிருந்து ஆப்கானுக்குள் விமானத் தாக்குதல்களை நடாத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இப்படியான இடங்கள் வேண்டுமென்றால், ஒரே தேர்வு பாகிஸ்தான்!

பாகிஸ்தான் அரசுடன் அமெரிக்கா மிக நெருக்கமாக இருந்த நாட்கள் அவை. இதனால் பாகிஸ்தான் அரசின் அனுமதியுடன், அமெரிக்க ராணுவம் ஓசைப்படாமல் ஷாம்சி தளத்தை எடுத்துக் கொண்டது.

ஆப்கானுக்குள் நடாத்தப்பட்ட பல விமானத் தாக்குதல்களுக்காக ஷாம்சி தளத்தில் இருந்துதான் விமானங்கள் அனுப் பப்பட்டன.

அப்போதும் பாகிஸ்தானுக்குள் ஒரு அமெரிக்க விமானத் தளம் இயங்குவதை இரு நாடுகளும் ரகசியமாக வைத்திருந்தன. அந்த ரகசியம் 2000ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் முதல் முதலாக வெளியுலகுக்குத் தெரியவந்தது எப்படியென்றால், ஒரு விபத்தின் மூலமாக!

ஜனவரி 2002ம் ஆண்டு, அமெரிக்க விமானப்படையின் கே.சி.130 ரக விமானம் ஒன்று ஷாம்சி விமானத் தளத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளாகியது. பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். இந்தச் செய்தி வெளியானபோதுதான் அமெரிக்க விமானப்படையின் விமானம் பாகிஸ்தானுக்குள் என்ன செய்கிறது என்ற கேள்வி எழுந்தது. அதையடுத்தே அப்படியொரு அமெரிக்க விமானத் தளம் பாகிஸ்தானுக்குள் இருக்கும் விஷயம் முதலில் வெளியாகியது.

2006ம் ஆண்டு ஷாம்சி விமானத்தளத்தை அமெரிக்க விமானப்படை காலிசெய்து கொண்டு போய்விட்டது. இப்போது அமெரிக்கப் படைகள் அங்கே இல்லை என்று பாகிஸ்தானும் அறிவித்தது.

ஆனால் அதன்பின்னரும் சி.ஐ.ஏ. அந்தத் தளத்தை ரகசியமாக உபயோகித்துக் கொண்டிருந்தது. 2009ம் ஆண்டு பிரிட்டிஷ் பத்திரிகையான த டைம்ஸ் இந்தத் தளத்தை சி.ஐ.ஏ. உபயோகிக்கின்றது என்ற சந்தேகத்தை எழுப்பியது. வானிலிருந்து எடுக்கப்பட்ட கூகிள் ஏர்த் படம் ஒன்றில் இந்தத் தளத்தில் சி.ஐ.ஏ.யின் பிரிடேட்டர் (விமானியற்ற) விமானம் பார்க் பண்ணப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிவதாக த டைம்ஸ் எழுதியது.

இந்தக் கதை பரபரப்பாக அடிபடவே, மற்றைய ஊடகங்களும் இதுபற்றித் துருவத் தொடங்கின. நவம்பர் 2009ம் ஆண்டு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தானிய ராணுவ அதிகாரி ஒருவர், "2009ம் ஆண்டு நடுப்பகுதியிலேயே ஷாம்சி விமானத் தளத்திலிருந்து சி.ஐ.ஏ. வெளியேறிவிட்டது" என்று கூறியிருந்தார்.



அது நடந்து 8 வருடங்களின்பின் இப்போது 2017ல், ஷாம்சியிலிருந்து சி.ஐ.ஏ. வெளியேற வேண்டும் என்று அமெரிக்க அரசிடம் பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்திருக்கிறது என்றால், ஷாம்சியில் இருந்து சி.ஐ.ஏ. 2009ம் ஆண்டு வெளியேறவில்லை என்று அர்த்தமாகிறது!

இப்போது இந்த ரகசியத்தைப் போட்டுடைத்திருப்பது, நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைதான். நியூயோர்க் டைம்ஸின் நியூஸ் ஸ்டோரிக்காகக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்ட் உயரதிகாரி (பெயர் குறிப்பிடப்படவில்லை) ஒருவர், சி.ஐ.ஏ.யை வெளியேறுமாறு பாகிஸ்தான் அரசு கோரிக்கை அனுப்பியிருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

"பாகிஸ்தான் அரசின் கோரிக்கையின்படி சி.ஐ.ஏ. வெளியேறத்தான் வேண்டும். ஆனால் அது எப்போது நடைபெறும் என்பதைக் கூற முடியாது" எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சி.ஐ.ஏ.க்கு ஆப்கானிஸ்தானில் விமானப்படை முகாம்கள் வெளிப்படையாகவே இருக்கின்றன. எனவே ஷாம்சியிலிருந்து உளவு விமானங்களை ஆப்கானிஸ்தானிலுள்ள முகாம்களுக்கு நகர்த்துவது சி.ஐ.ஏ.க்கு ஒன்றும் பெரிய விஷயமல்ல. அங்கிருந்து கிளம்பி, பாகிஸ்தானின் இலக்குகளின்மீது குண்டு வீசுவதும் பெரிய விஷயமல்ல.

இருந்து பாருங்கள், அப்படி குண்டு வீசத்தான் போகிறார்கள்!


## பரபரப்பின் அறிவித்தல்!

பரபரப்பு வார இதழின் 1வது இதழில் இருந்து வாங்காமல், 12வது 13வது இதழ்களை வாங்கிய வாசகர்கள் பலர் பரபரப்பு வார இதழின் பழைய இதழ்களை வாங்குவதற்காக வர்த்தக நிலையங்களுக்கு நேரில் செல்கிறார்கள். பழைய இதழ்கள் வர்த்தக நிலையங்களில் இருக்காது. நீங்கள் பரபரப்பின் பழைய இதழ்களை வாங்க விரும்பினால், கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது, நீங்கள் வழமையாக பரபரப்பு வார இதழை வாங்கும் பத்திரிகை விற்பனை நிலையத்தில் எந்தெந்த இதழ்கள் தேவை என்பதைத் தெரிவிக்கவும். அடுத்த வார இதழுடன் நீங்கள் தவறவிட்ட இதழ்களையும் அனுப்பி விடுவோம். நீங்கள் அங்கு செல்லும்போது தவறவிட்ட இதழ்களை வாங்கலாம்.

பழைய இதழ்களையும் வாசகர்கள் தேடி வாங்கும் வார இதழ் பரபரப்பு என்பதில், பெருமையடைகிறோம். பழைய இதழ்களை அனுப்புவதற்கு ஒருவரையும் எமது அலுவலகத்தில் நியமித்திருக்கிறோம். உங்கள் அபிமானத்துக்கு நன்றி.

நேரடித் தொடர்புகளுக்கு: 076 367 2842



# உலகத்தால் மறக்கப்பட்டவர்கள்!

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்த தமிழர்கள் சிலர் மேலை நாடுகள் சிலவற்றில் இன்னமும் குடியுரிமை பெறாமல் வசிக்கிறார்கள். தமிழர்கள் மாத்திரமல்ல, வேறு இனத்தவர்கள் பலரும் அப்படி வசிக்கிறார்கள், வசிக்கும் நாட்டில் குடியுரிமை இல்லாமல்.

தமிழர்களை நாம் கூறியது உதாரணத்துக்கு. இவர்கள் தமக்கு ஏதோ ஒரு காலத்தில் அந்த நாட்டில் குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் புதிய நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு கேட்காமலேயே குடியுரிமை கொடுக்கும் நடைமுறையும் பல மேலை நாடுகளில் உண்டு.

இவர்களில் அனைவருக்குமே தாம் பிறந்த நாட்டில் குடியுரிமை உண்டு. ஏதோ காரணத்துக்காக அந்தக் குடியுரிமை வேண்டாம் என நிராகரித்துவிட்டுப் புதிய நாடு ஒன்றில் குடியேறி அங்கு பிரஜாவுரிமைக்காகக் காத்திருப்பவர்கள் இவர்கள். நிலைமை தலைக்குமேல் போனால் இவர்களால் தமது தாயகத்துக்குச் செல்ல தமது குடியுரிமையைப் பயன்படுத்த முடியும்.

மொத்தத்தில் இவர்களுக்கு ஏதோ ஒரு இடத்தில் குடியுரிமை இருக்கிறது. அவர்கள் பிறப்பால் எந்த நாட்டவர் என்ற அடையாளமும் இருக்கிறது.

ஆனால் பல லட்சக்கணக்கான மக்கள் எந்த நாட்டு குடிமக்கள் என்பது அவர்களுக்கே தெரியாமல் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இவர்களுக்கு எந்தவித அடையாளமும் கிடையாது.

இவர்கள் ஏதோ ஒரு நாட்டில் பிறந்திருக்க வேண்டுமல்லவா? அந்த நாடுகளால் புறக்கணிக்கப்பட்டார்களா? அல்லது மறக்கப்பட்டார்களா?

இவர்களது குழந்தைகள் பள்ளிக்கு செல்லவோ, ஏதாவது ஒரு சொத்தை வாங்கவோ இவர்களுக்கு உரிமை இல்லை. இவர்கள் இருக்கும் நாட்டில் தேர்தலில் வாக்களிக்கவோ, இருக்கும் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் பயணம் செய்யவோ இவர்களால் முடிவதில்லை. அருகில் இருக்கும் ஒரு நகரத்திற்கு கூட இவர்களால் செல்ல முடிவதில்லை. இவர்களுக்கு மனிதர்களுக்கு உண்டான அடிப் படைத் தேவைகள் கிடைப்பதில்லை. குறிப்பாக வீடு என்று சொல்லிக் கொள்ள இவர்களுக்கு ஒரு இடமில்லை.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

இவர்களுக்கு ஏன் குடியுரிமை இல்லை? இவர்களது பிரச்சனையின் ஆணிவேர் எது?

இவற்றையெல்லாம் யாரும் கண்டு கொள்வதில்லை. சுருக்கமாகச் சொன்னால் மனித இனத்தால் இவர்கள் மறக்கப்பட்டவர்கள்!



இப்படிப்பட்ட மக்கள் சுமார் 20 லட்சம் பேர் தாய்லாந்து நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் இன ரீதியாக அங்குள்ள சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக (மலைவாழ் பழங்குடியினர்) இருக்கிறார்கள். ஒருவேளை, உலகில் நாடற்றவர்களில் அதிகமானோர் இவர்களாகத்தான் இருக்கக்கூடும்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தாய்லாந்தின் மியான்மார் நாட்டு எல்லைப் பகுதியில் பிறந்தவர்கள். தாங்கள் தாய்லாந்தில்தான் பிறந்தோம் அல்லது தங்க ளது பெற்றோர் தாய்லாந்தில்தான் பிறந்தனர் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் இவர்களிடம் இல்லை.

“எனது அனைத்து உரிமைகளும், இன்னும் சொல்லப்போனால் எதுவுமே, எப் போதுமே எனக்குக் கிட்டவில்லை” என்கிறார் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான, 38 வயது சய்தா யெங் கயூதாம். இவர் ஒரு தோட்டக்காரராக வேலை பார்த்து வருகிறார். இப்போது தாய்லாந்தில் வசிக்கிறார்.



“நான் எங்கும் போக முடிவதில்லை. அடையாளம் ஏதும் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரிக்குகூடச் செல்ல முடிவதில்லை. வியாபாரம் செய்ய முடிய வில்லை. படிக்க முடியவில்லை. நாங்கள் எங்களுக்குரிய வேலையை தேர்ந்தெடுக்க முடியவில்லை. மற்றையவர்களுக்கு வேலை செய்துகொடுக்கும் தொழிலா ளியாகத்தான் இருக்க வேண்டியிருக் கிறது” என்கிறார் அவர் ஏக்கத்துடன்.

“இங்குள்ள மற்றையவர்களுக்கு கிடைக்கும் அடிப்படை வசதிகள் ஏன் எனக்கு கிடைக்கவில்லை?” என்று கேள்வி அவர் எழுப்புகிறார், “நான் இந்த நாட்டின் குடிமகனாக இருந்திருந்தால், எனது கல்வியை முடிந்திருக்கலாம். நான் ஏற்கனவே ஒரு முதுநிலை பட்டத்தை வாங்கியி ருப்பேன். இந்த நாட்டின் குடிமக்களாக வுள்ள எனது நண்பர்களில் சிலர் முது நிலை பட்டதாரிகளாக இருக்கிறார்கள்” என்றும் அவர் கொதிக்கிறார்.

இந்த சய்தா யெங்கைப் போன்ற பலர் உலகமய மாக்கல் யுகத்தில் அதிகரித்துக் கொண்டு வருகிறார் கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் இது போன்ற மக் களுக்கு குடியுரிமை அளிப்பது, அல்லது பறிப்பது போன்றவை அரசியல் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

“மக்கள் தங்கள் குடியுரிமையைப் பெற ஜனநாயகம் வழிவகுக்கிறது. இது மிக முக்கியமான சமூக மற்றும் அரசியல் அந்தஸ்து. அப்படிப்பட்ட இந்தக் குடியுரிமை யைத் தங்களது அரசியல் எதிரிகளை தேர்தலில் தோற்கடிக்க சில அரசியல் கட்சிகள் அவற்றை கருவிகளாகப் பயன்படுத்தி வருகின்றன” என்கிறார் ஜேம்ஸ் கோல்ட் ஸ்டான். இவர் திறந்த சமூகத்தின் நீதித் தொடக்கம் (Open Society Justice Initiative) என்ற அமைப்பின் நிர்வாக இயக்குநராக இருக்கிறார்.

தற்போது உலகத்தில் 1 கோடியே 50 லட்சம் மக்கள் நாடற்றவர்களாக இருக்கி றார்கள். இது ஒரு உத்தேசமான கணக்குத்தான். சரியாகப் பார்க்கப் போனால் எவ்வளவு பேர் நாடற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது.

“நாடின்மை என்பது உலகில் இருக்கும் ஒரு அம்சம்தான். ஆனால் நாடற்றவர் களின் கதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உள்ளது” என்கிறார் பிலிப்பிலே கிளர்க். இவர் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் துறைக் கான தூதராக இருக்கிறார். நாடற்றவர்கள் விஷயத்தில் நிபுணர் இவர்.

நடற்றவர்களுக்காக உலகெங்கும் பல அகதி முகாம்கள் இருக்கின்றன. இவற்றில் இருப்பவர்கள் யார்யார் என ஆராயத் தொடங்கினால் ஆச்சரியமான சில தரவுகள் கிடைக்கின்றன.

உதாரணமாக, பங்களாதேஷில் உள்ள 20க்கும் மேற்பட்ட அகதிகள் முகாம்களில் சுமார் 2 லட்சம் உருது மொழி பேசும் பீகார் மாநிலத்தவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு சாதாரண பங்களாதேஷ் பிரஜைகளுக்குக் கிடைக்கும் எந்தவொரு அரசு சேவையும் கிடைப்பதில்லை.

பாகிஸ்தானின் பீஹார் மாநிலத்தைச் சேர்ந்த இவர்கள் எப்படி இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் பங்களாதேஷ்வரை வந்து சேர்ந்தார்கள்?

இவர்கள் முன்பு நிலபுலன்களை வைத்து வளமாக வாழ்ந்தவர்கள்தான். ஆனால் 1971ம் ஆண்டு உருது மொழி பேசும் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்த போதுதான் இவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷைப் பிரித்துக் கொடுத்தது இந்தியா!

பங்களாதேஷிலிருந்து பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்ற பீகார் மாநிலத்தவர்களை முதலில் பாகிஸ்தான்தான் அகதிகளாக ஏற்றுக்கொண்டு அடைக்கலம் கொடுத்தது. அவ்வாறு அகதிகளாகச் செல்லாதவர்கள்தான் இப்போது பங்களாதேஷ் அகதி முகாமில் வசிக்கும் 2 லட்சம் பீகார் மாநிலத்தவர்கள்.

பங்களாதேஷ் என்ற நாடு பாகிஸ்தானிலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டது 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி! அதாவது இவர்கள் 45 ஆண்டுகளுக்கு மேலாக நாடற்றவர்களாக இருக்கிறார்கள்!!

மியான்மார் நாட்டின் மேற்குப் பகுதியில் ரோஹிங்கியா முஸ்லீம் இன சிறுபான்மை மக்களும்கூட இன்றைக்கு நாடற்றவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இவர்களிட மிருந்து குடியுரிமை பறிக்கப்பட்டுள்ளது. சிவில் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. கட்டாயப்படுத்தப்பட்டு அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

சுமார் 1 லட்சம் ரோஹிங்கியா மக்கள் கடந்த பத்தாண் டுகளில் மியான்மார் நாட்டிலிருந்து பங்களாதேஷ் நாட்டுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அதற்காக இவர் கள் பங்களாதேஷ் பிரஜைகள் ஆகிவிட்டதாக அர்த்தமில்லை. இவர்கள் பங்களாதேஷின் அகதி முகாம்களில் அல்லது தெருக்க ளில் வாழ்ந்து வருகிறார்கள்.

இதேபோல மலேசியாவில் உள்ள சபா மாகாணத்தில் பல ஆயிரக் கணக்கான பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியக் குழந்தைகள் நாடற்றவர்களாக இருக்கிறார்கள். பாகுபாட்டுச் சட்டங்களால் பாதிக் கப்பட்ட இந்தக் குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் மறுக்கப்படு கின்றன. இதனால் அவர்கள் தங் கள் குடும்பங்களை விட்டு அடிக்கடி பிரிய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மலிவான தொழிலாளர்களுக்கு கிராக்கி இருப்பதால் பல ஆயிரக்கணக்கான இந் தோனேஷிய மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டுக் காரர்கள் கடந்த 30 ஆண்டுகளில் சபா மாகா ணத்திற்கு வந்துள்ளனர். இந்த மாகாணத்தின் மொத்த ஜனத்தொகையில், மூன்றில் ஒரு பகுதி மக் கள் அதாவது 7 லட்சத்து 50 ஆயிரம் இப்போது நாடற் றவர்களாக வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்.

மலேசியாவில் நாடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே போவதால், அவர்களில் பெரும்பாலானவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு அதிகாரிகள் கட்டாயப்படுத்தி வருகின்றனர். இவர்களது குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் மறுக்கப்படுவதால் இவர்கள் தங்களது குழந்தைகளை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள்.

இப்போது சுமார் 10 முதல் 30 ஆயிரம் குழந்தைகள் வரை இவ்வாறு தங்களது



பெற்றோர்களால் கைவிடப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு எந்தவொரு நாடும் தீர்வு ஏற்படுத்த முயலாத நிலையில் தாய்லாந்து மாத்திரம் வழக்கத்திற்கு மாறான, அதே சமயம் உத்வேகமான திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



குறிப்பிட்ட சில ஊர்களில் வசிக்கும் வயதான பிரஜைகளின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் பிரஜாவுரிமை வழங்கும் திட்டம் அது. அதாவது அந்த ஊரில் நெடுநாள் வசிக்கும் வயதான பிரஜை ஒருவர், குறிப்பிட்ட நாடற்ற ஒருவர் அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்தவர் என உறுதிப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் இந்தத் திட்டத்தில் தாய்லாந்தில் நூற்றுக்கணக்கான பேருக்குக் குடியுரிமை கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் தாய்லாந்து மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கை மனச்சாட்சியை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

43 வயதான பூன் பூமா, தனது தாயார் பனை ஓலை சுவடியில் எழுதி வைத்திருந்த தனது பிறந்த திகதி மூலம் குடியுரிமை கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவர் அதிகாரிகளை நாடியபோது, "நீங்கள் தாய்லாந்து நாட்டுக்காரர் அல்ல" என்று கூறி ஒதுக்கி விட்டார்கள்.

அதன் பிறகு மரபணுச் சோதனை நடத்தி, தான் தாய்லாந்து நாட்டுத் தாயாருக்குப் பிறந்த பெண்தான் என்பதை உறுதி செய்யும் ஆவணத்தை அதிகாரிகளிடம் கொடுத்தார். அதை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்.

"எனக்கு மிகப்பெரிய குடும்பம் இங்கே இருக்கிறது. எனது குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 335 பேர் இங்குள்ளனர். அதை வைத்து நான் மரபணுச் சான்றிதழைப் பெற்றேன். இப்போது மற்றையவர்கள் குடியுரிமை பெறவும் நான் உதவி செய்து வருகிறேன். நான் தாய்லாந்து நாட்டுக்காரப் பெண் என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது. நான் பிறப்பு முதல் தாய்லாந்து நாட்டுக்காரப் பெண் என்பதில் பெருமை ஏற்படுகிறது" என்கிறார் அந்தப் பெண்.

ஆனால், மரபணுச் சோதனைக்குக் கைகொடுக்க, தாய்லாந்தில் இவருக்கு உறவினர்கள் இருப்பதுபோல, இவ்வளவு உறவினர்கள் எல்லோருக்கும் இருப் பதில்லை என்பதுதான் சோகம்.

